விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 252 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 12 ஞாயிற்றுக்கிழமை (28.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## எங்கள் கையில் எதுவும் இல்லை
# இலங்கையின் கடன்கள் தொடர்பில் சீனா பதில்

(கொழும்பு)

**இலங்கை சீனாவிடம் பெற்ற கடன்களை மறுசீரமைக்குமாறு சீனாவிடம் கோரியிருந்த நிலையில் எங்கள் கையில் எதுவும் இல்லை. உங்கள் கைகளிலேயே அது உள்ளது என சீனா பதில் வழங்கியுள்ளது.**

இலங்கை, சீனாவிடம் பெற்ற கடன் தொடர்பில் சீனா வியத்தகு முடிவை எடுக்க வேண்டும் என்று அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைத்துள்ள சீனத் தூதரக பேச்சாளர் ஒருவர், சீன வங்கிகளுடனான கடன் பிரச்சினையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து மூன்று மாதங்களுக்கு முன்னரே இலங்கை நிதியமைச்சகத்திடம் சீனா தொடர்பு கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து விவாதிக்க சீனா, தமது வங்கிகளை ஊக்குவித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனப் பிரதமர் லீ கெகியாங் மற்றும் முன்னாள் இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போதும் சீன நிலைப்பாடு தெரிவிக்கப் 19



### இரு நாட்களில் எரிபொருள் வரிசை முடிவுக்கு வரும்

17 பக்கம் பார்க்க

## 6 கொரோனா மரணம்

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 6 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கோவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16,685 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

### அரச நிறுவனத்தில் பலர் திறமையற்றவர்கள்
## பெரும்பாலான அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது கட்டாயமாகும்
### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

இலங்கையின் அரச நிறுவனத்தில் பெரும்பான்மையானவர்கள் திறமையற்றவர்கள் எனத் தெரிவித்துள்ள எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது 19

## வடக்கு, தமிழ்நாட்டு சுற்றுலாத்துறையை
### இணைப்பதற்கு திட்டம்

(கொழும்பு)

வட மாகாண சுற்றுலாத்துறையையும் இந்திய தமிழ்நாட்டு சுற்றுலாத்துறையையும் இணைக்க வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா திட்டங்களை வகுத்து வருகிறார்.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையதின் ஊடாக தமிழ்நாட்டை 19

## சீனத் தூதுவர் கண்டிக்கு விஜயம்

(கண்டி)

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹோங் நேற்று கண்டிக்கு விஜயம் செய்தார்.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் அஸ்கிரி மகா விகாரையை 19

### வட்டுக்கோட்டை மாவடியில்
## 3 மாத மாட்டுக்கன்று அடித்துப் படுகொலை
### குடும்பத் தகராறால் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிப் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக 3 மாதங்கள் நிரம்பிய மாட்டுக் கன்றினை அடித்துக் கொலை செய்த கொடூரம் இடம்பெற்றுள் 19

## பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும்
### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை ஸ்ரீ லங்கா 19

## சாதாரண் குடும்பத்தின் மாதாந்தச் செலவு
### ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளமையினால் சாதாரண குடும்பம் ஒன்றுக்கு மாதாந்தம் நுகர்வுக்கான செலவு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளி 19

## ஆர்ப்பாட்டக்காரர்களை வேட்டையாடும் அரசுக்கு எவ்வாறு சர்வதேசம் உதவும்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி



(கொழும்பு)

நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றார்.

ஒருபுறம் ஆர்ப்பாட்டக்காரர்களை வேட்டையாடிக் கொண்டு, மறுபுறம் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைந்துருகும்
## 9ஆம் ஆண்டின் நினைவு

மலர்வு 19 . 12 . 1939



உதிர்வு 06 . 09 . 2013

அமரர்

# கணபதிப்பிள்ளை நடராசா

( இளைப்பாறிய இ.போ.ச. பரிசோதகர் )

திதி : பிரதமை – 28.08.2022

தவப்பேறாய் வந்துதித்த
குடும்பக் குலவிளக்கே
தவறாத புன்னகையால்
துயர் துடைத்த உத்தமரே
கவலைகள் ஏதுமின்றிக்
கனிவோடு வளர்த்தவரே
நவ ஆண்டு சென்றிடினும்
எம் நினைவு உம் வசமே:

(C-4798)

இல. 503, இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்

## 31ஆம் நாள்
### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.07.2022 (வெள்ளிக்கிழமை) அன்று சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

# அமரர் அருந்தவநாதன் திலகவதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (26.08.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 137, விவேகானந்தநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

(12577)

தகவல்
குடும்பத்தினர்

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி

தொடர்புகளுக்கு:-
**076 755 8606**
**077 259 0391**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை இரண்டு இலட்சம் மட்டும்

தொடர்புகளுக்கு:-
**077 911 6983**
**077 148 8348**

யாழ்ப்பாணம் புத்தூரில் 186 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 ½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 ½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை இரண்டு இலட்சம் மட்டும்

(12554)

தொடர்புகளுக்கு:-
**077 658 5999**
**076 438 5814**
**077 874 8135**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாவுக்கான தடுப்பூசிகளை துரிதப்படுத்துங்கள்

# கடந்த 8 மாதங்களில் மட்டும் 10 இலட்சம் பேர் உயிரிழப்பு



## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்று நோயால் இந்த ஆண்டு இதுவரை 10 இலட்சம் பேர் உயிரிழந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

அத்துடன், தொற்று நோய் தொடங்கி இரண்டரை வருடங்களில் மொத்தம் 64 இலட்சம் பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இரண்டரை ஆண்டுகளாக கொரோனாத் தொற்று பரவி வரும் நிலையில் கொரோனா மரணங்களை தடுப்பதற்குத் தேவையான அனைத்து வளங் களையும் கொண்டிருந்த போதும் கூட இந்த ஆண்டு மட்டும் இதுவரை 10 இலட்சம் பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் என்றால், நாம் கொரோனாவுடன் வாழ கற்றுக் கொள்கிறோம் என்று சொல்ல முடியாது என இது குறித்துக் கருத்து வெளியிட்ட உலக சுகா தார அமைப்பின் தலைவர்டெட்ரோஸ்அதானோம் கெப் ரேயஸ் தெரிவித்தார்.

அனைத்து சுகாதாரப்பணியாளர்கள், முதியவர்கள் மற்றும் அதிக ஆபத்தில் உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான முயற்சிகளை வலுப்படுத்துமாறு அனைத்து அரசாங்கங்களையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஒவ்வொரு நாடும் தங்கள் மக்கள் தொகையில் குறைந்தது 70 வீதமானவர்களுக்கு தடுப்பூசி போடுவதை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, உலக அளவில் புதிய வாராந்திர தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை முந்தைய வாரத்தை விட கடந்த வாரம் ஒன்பது சதவீதம் குறைந்துள்ளது. ஒகஸ்ட் 21 வரையான ஒரு வாரத்தில் 5.3 மில்லியனுக்கும் அதிகமான புதிய தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தரவுகள் தெரிவிக்கின்றன.

புதிய வாராந்திர இறப்புகளின் எண்ணிக்கையும் முந்தைய வாரங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது. கடந்த வாரம் உலகளவில் 14,000 இற்கும் அதிகமான கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

## எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன் மீண்டும் அதிகரிக்கும் வரிசைகள்

(கொழும்பு)

முன்பதிவு செய்யப்பட்ட எரிபொருள் விநியோக்கப்படாமையால் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என அகில இலங்கை பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் பாவனை அதிகரிப்புடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசைகள் மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் தற்போது எரிபொருள் இருப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பெற்றோலிய போக்குவரத்து தாங்கி உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்தார்.

இதேவேளை 30 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் தரையிறக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## அத்தியாவசியமற்ற பொருட்களின் இடைநிறுத்தம் கட்டம் கட்டமாக நீக்கப்படும் - ஆளுநர்



(கொழும்பு)

அத்தியாவசியமற்ற 305 பொருட்களின் இறக்குமதியை இடைநிறுத்துவது சிறந்த முடிவு என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்தக் கட்டுப்பாடு அத்தியாவசியமான நடவடிக்கை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

வரையறுக்கப்பட்ட அந்நியச் செலாவணியையே நாம் பயன்படுத்த வேண்டும் என்றும் குறிப்பாக எரிபொருள், மருந்து, எரிவாயுவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு பணத்தை பயன்படுத்தினால் இது போன்ற சூழ்நிலையில் மக்களுக்கு பெரும் வசதியாக இருக்கும் என ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். தற்போது நிலவும் சூழ்நிலைக்கு தீர்வு கிடைத்தவுடன், கட்டுப்பாடுகள் கட்டம் கட்டமாக நீக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் சுட்டிக்காட்டினார். (நி)

# கோட்டாபய ராஜபக்ஷவிற்கு சலுகைகள் ஏதும் வழங்கமுடியாது

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பு ரீதியாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் எதுவும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இல்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிக்காலம் முடிந்து ஓய்வு பெற்ற ஜனாதிபதியல்ல, அவர் சேவையிலிருந்து விலகிய ஜனாதிபதி இவ்வாறு சேவையில் இருந்து விலகிய ஜனாதிபதி ஒருவருக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சலுகைகள் எதுவும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளிட்ட எந்தவொரு சிறப்புரிமையும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி)

### ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து

## புகைப்படம் எடுத்தோர் தொடர்பில் விசாரணைகள் தீவிரம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் நாற்காலியில் அமர்ந்து புகைப்படம் எடுத்த பொலிஸார் மற்றும் ஜனாதிபதி மாளிகைக்குள் பல இடங்களில் புகைப்படம் எடுத்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என கொழும்பு கோட்டை நீதிவானிடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன முன் வைத்த குற்றச்சாட்டிற்கு பதிலளிக்கம் போது கொழும்பு மத்திய பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிவான் திலின கமகே முன்னிலையில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே ஜனாதிபதியின் நாற்காலியில் அமர்ந்ததை மற்றும் ஜனாதிபதியின் கொடியை பயன்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 13 ஆவது விளையாட்டு விழா

## செப்.1 ஆம் திகதி ஆரம்பம்

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 13 ஆவது விளையாட்டு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் முதல் கட்ட போட்டிகள் யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை மேசைப்பந்தாட்டம், எறிபந்தாட்டம், பெண்களுக்கான சதுரங்கம், வொலிபோல், 17 வயதுப் பிரிவினருக்கான கரம், கடற்கரை வொலிபோல், வலைப்பந்தாட்டம், காற்பந்தாட்டம், பழுதூக்கல், கூடைப்பந்தாட்டம், ஆண்களுக்கான சதுரங்கம், கராத்தே, கிரிக்கெட், கொக்கி போன்ற விளையாட்டுக்களும் இரண்டாம் கட்ட போட்டிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 12,13,14 ஆம் திகதிகளில் கபடி, பட்மின்ரன், காண்ட் போல் போட்டிகளும் 3 ஆம் கட்ட போட்டிகள் யாழ். மாவட்டத்தில் 13 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை எல்லே, உடற்பயிற்சி, டென்னிஸ் போட்டிகளும் 4 ஆம் கட்ட போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஜூடோ, வுசு, தைக்வொண்டோ, குத்துச்சண்டை,மல்யுத்தம் போட்டிகளும் 5 ஆம் கட்ட போட்டிகள் யாழ். மாவட்டத்தில் 24 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வரை ஆண்களுக்கான கடினப்பந்து கிரிக்கெட்,நீச்சல், அரைமரதன், சைக்கிள் ஓட்டம் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (4-90)

# பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளோம்

## கே.எல்.ராகுல்



இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உட்பட 6 அணிகள் பங்கேற்கும் 20 ஓவர் ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் நேற்று ஆரம்பமாகியது.

செப்டெம்பர் 11 வரை இந்தப் போட்டிகள் நடைபெற உள்ளது. இந்தத் தொடரில் இந்திய அணி ரோகித் சர்மா தலைமையில் களம் காண்கிறது. இன்று இந்தியா தனது முதல் போட்டியில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி குறித்து இந்திய வீரர் கே.எல்.ராகுல் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது,

இந்தியா-பாகிஸ்தான் போட்டியை நாங்கள் எப்போதும் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம். பெரிய தொடர்களில் மட்டும் பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறோம். எனவே, பாகிஸ்தான் போன்ற அணிக்கு எதிராக விளையாடுவது எங்களுக்கு உற்சாகமானது. நமக்கும் நாமே சவால் விடும் சிறந்த வாய்ப்பு.

கடந்த இருபது-20 உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா தோல்வி அடைந்தது. இன்னும் வருத்தமளிக்கிறது. பெரிய போட்டிகளில் விளையாடும்போது ஒவ்வொரு அணியும் பெரிதாக சாதிக்க விரும்புகிறது, துரதிர்ஷ்டவசமாக, அது எங்களுக்கு நடக்கவில்லை.

வலுவான பாகிஸ்தானிடம் நாங்கள் ஆட்டமிழந்தோம். எனவே இப்போது அவர்களுக்கு எதிராக மீண்டும் ஒருமுறை விளையாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பிற கருத்துக்களுக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அது உண்மையில் ஒரு வீரரைப் பாதிக்காது.

குறிப்பாக விராட் கோலி போன்ற உலகத்தரம் வாய்ந்த வீரர் வெளியில்இருந்து வரும் கருத்தால் பாதிக்கப்படமாட்டார். அவருக்கு ஒரு சிறிய இடை வெளி கிடைத்தது என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# அண்டர்சன் புதிய சாதனை



இங்கிலாந்து-தென்னா பிரிக்கா இடையிலான 2 ஆவது டெஸ்டின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் 40 வயதான ஜேம்ஸ் அண்டர்சன் இந்தப் போட்டியில் களம் இறங்கியதன் மூலம் புதிய சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார்.

அண்டர்சன் விளையாடும் 174ஆவது டெஸ்ட் இதுவாகும். அதேசமயம் சொந்த மண்ணில் ஆடும் 100 ஆவது டெஸ்டாக இது அமைந்துள்ளது. இதன்மூலம் உள்நாட்டில் 100 டெஸ்ட்களில் கால் பதித்த முதல் வீரர் என்ற பெருமையை பெற்றார். (4)

# பந்து வீச்சாளர்கள் பட்டியலை வெளியிட்டது ஐ.சி.சி.

டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்கள் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது.

இந்த தரவரிசையில் தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர் ரபாடா 2 இடங்கள் முன்னேறி உள்ளார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ரபாடா 5 விக்கெட்டுக்களையும் 2ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

7 விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் ரபாடா இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான பும்ரா - அப்ரிடி ஆகியோரை பின்னுக்கு தள்ளி தரவரிசையில் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ரபாடா 836 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் அப்ரிடி-பும்ரா 828 புள்ளிகளுடன் 4, 5ஆவது இடங்களிலும் உள்ளனர். முதல் இடத்தை அவுஸ்திரேலிய அணியின் கப்டனும் வேகப்பந்து வீச்சாளருமான கம்மின்ஸ் தொடர்கிறார். (4)


நிரந்தர வருமானத்தை ஈட்டித்தரும் சர்வதேச கற்கை நெறிகள்

Crypto Currency/ Forex/ Stock Trdings

Indroductions to Markets
Exchanges/ Broker Registrations
Candles, Charts, Patterns
Spot & Futures Trading
Trading Technics & Indicators
Online Trading & Many more

Duration: 6 Weeks
Sat : 10.00 am - 12.00 noon
Sun: 10.00. am -12.00 noon
Fees: 27,000

Starting:10-09-2022 முதல் 2 வகுப்புகள் இலவசமாக நடைபெறும்

ஆசனங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், முற்பதிவு செய்யவும்.

முழு நேர, பகுதி நேரமாக இந்தத் துறையில் நீங்கள் பயணிக்கலாம்

SRS TREND TRADING
[British Collge of Higher Studies]
No.15, Sirambiyadi Lane, Jaffna
BCHS
021-2224550, 0777585913



(C4804)



வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிறுவனத்திற்கு
- தச்சு வேலையாட்கள்
- வாகனசாரதி
- தளபாட பெயின்ரர்
- கூலி வேலையாட்கள்

தேவை. நிரந்தரமான வேலையும் தகுந்த சம்பளமும் வழங்கப்படும். தங்குமிட வசதியும் உண்டு.

தொடர்பு - ஆர்க் தளபாட நிலையம்
35, கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்.(பஸ் டிப்போ அருகாமை)
021 221 9909, 077 300 1763
(12592)



உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல்குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

[illegible] 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்

(12591)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாவை பாதுகாக்கவே ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது

## இதன் விபரீதத்தை ஜனாதிபதி விரைவில் எதிர்கொள்வார் என்கிறார் சரத் பொன்சேகா

(கொழும்பு)

"நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இலங்கையில் அடைக்கலம் கொடுத்து அவரைப் பாதுகாக்கவே போராட்டச் செயற்பாட்டாளர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்து அடக்கி வருகின்றார். ஆனால், இதன் விபரீதத்தை அவர் விரைவில் எதிர்கொள்வார்" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசுக்கு எதிரான போராட்டச் செயற்பாட்டாளர்களை அடக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டும்.

இல்லையேல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடந்த அவமானத்தைப் போல் இந்நாள் ஜனாதிபதியும் சந்திக்க வேண்டி வரும்.

69 இலட்சம் மக்கள் தனக்கு வாக்களித்தார்கள் என்று மார்தட்டி வீர வசனம் பேசிய கோட்டாபய இறுதியில் இலங்கையைவிட்டு விரட்டியடிக்கப்பட்டார்.

இன்று எந்த நாடும் அடைக்கலம் கொடுக்காத நிலையில் அவர் மீண்டும் இலங்கைக்கு வர எத்தனிக்கின்றார்" என அவர் தெரிவித்தார். (நி)


## 45 ஆம் நாள் நினைவில் நன்றி நவிலல்

தோற்றம் 30 01 1941

மறைவு 15 07 2022



அமரர்

### இராசதுரை கனேசராசா

ஓய்வு பெற்ற அதிபர்

உங்கள் மூச்சுக் காற்றை நுகர்ந்த புத்தகங்கள்–உங்கள்
வாசங்களை பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றன
அவ் வாசனைகள் எம்மை வழிநடாத்தும்–அஃதே
என்றும் மலரும் உங்கள் நினைவுகள் போல
எம்மால் உங்கள் பணி தொடர்கதையாய் தொடரும்...

15.07.2022 எங்கள் அப்பாவின் பிரிவு கேட்டு எம்முடன் துயர் பகிர்ந்த அனைவருக்கும், தொலைபேசி வழியாக தங்கள் அனுதாபங்களையும், முகநூல், புலனம் வழியாக தங்கள் நினைவுகளை பகிர்ந்த அனைத்து உறவுகளுக்கும் எம் தேவையறிந்து எம்முடன் துணை நின்று உதவி பகிர்ந்த உறவுகள் அனைவருக்கும் எங்கள் குடும்பம் சார்ந்த நன்றிகளை இன்றைய 45 ஆம் நாள் நினைவில் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(12573)

நன்றிகளுடன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி. சிவமலர் மகேஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தையார்



அமரர். சுப்பையா
### இராசரத்தினம்
(முன்னாள் ஆயுள்வேத வைத்தியர்)

அவர்கள் 24.08.2022 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும் (12584)

ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்-18.01.1928 விண்ணில்-06.09.2021



அமரர். திருமதி.சுபத்திரா
### காசிப்பிள்ளை

திதி:28.08.2022

பாடுவீர்கள் எந்த நாளும் ஐம்புராணம்
படிப்பீர்கள் எந்த நாளும் பகவத் கீதை
வளர்த்தீர்கள் எம்மை தந்தையும் தாயுமாகி
சென்றீர்கள் எங்கே எமைவிட்டு அம்மா!
என்றும் உங்கள் நினைவாக வாழும் குடும்பத்தினர்

ஓம் சாந்தி

(12562)

கனுக்கேணி கிழக்கு, முள்ளியவளை. குடும்பத்தினர்.


# இராசிபலன்

28.08.2022
ஆவணி 12 ,ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பிற்பகல் 3.15 மணிவரை
பூரம் முன்னிரவு 11.13 மணிவரை

சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சித்தாமிர்தம்.

சந்திராஷ்டமம்
அவிட்டம்

வளவன்

**மேஷம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்,பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்பி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** எதிலும் கவனத்துடன் நடந்து கொள்வது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம்,வழிபாடு முன்னேற்றம் தரும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் வாய்ப்புண்டு,அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர்ப் பயணங்கள் கைகூடும், கற்பனை மிகுதியான நாள்,போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள்,தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்,வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உறவினர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** ஊர் மாற்றம் இட மாற்றம் என்பன இடம் பெறலாம், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கைகள் எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கொடுக்கும், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், சுவாரசியமான சம்பவங்கள் இடம் பெறலாம்,செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேஸ்வரர் ஆலய நிர்மாண பணிக்கு தடை:

# தொல்பொருள் அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தீர்வு கிடைக்கும்

## கலாநிதி. ஆறு. திருமுருகன்



(யாழ்ப்பாணம்)

**திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்மாண பணிகளுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்ற விடயம் தொடர்பில் உடனடியாக தொல்பொருள் அமைச்சின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மனவிதானய தம்மிடம் உறுதி அளித்துள்ளதாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.**

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மனவிதானவிக்கும் நல்லை ஆதீன முதல்வர் மற்றும் தெல்லிப்பழை துர்காதேவி தேவஸ்தான தலைவர் ஆகியோருக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்போன்று நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்த கலாநிதி. ஆறு. திருமுருகன், முக்கியமாக கீரிமலையில் ஜனாதிப்தி மாளிகைக்கு அண்மையில்உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மூன்று கோவில்கள் நீண்டகாலமாக பூஜை வழிபாடுகள் இடம்பெறாது உள்ளன. எனவே அந்த மூன்று கோயில்களிலும் உடனடியாக பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு கடற்படையினர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் கலந்துரையாடி அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலய கட்டுமான பணிகளுக்கு தொல்பொருள் திணைக்களத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தெரிவித்த போது தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் இந்த விடயத்தினை உடனடியாக அமைச்சு மட்டத்திற்கு தெரியப்படுத்தி தீர்வினை தான் பெற்றுத் தர முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலை நீண்ட காலமாக சைவ மக்களால் வணங்கப்பட்டு வந்த அந்த மலையில் வேறு சில கட்டுமான பணிகள் இடம்பெறுகின்றன.

எனவே அந்த விடயங்களை நிறுத்தி உரிய தீர்வினை பெற்றுத் தர வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தோம் என தெரிவித்தார். (4-18-33-104)



யாழ். ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 53 மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான சத்து உணவு வழங்குவதற்காக நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் பூமணி அம்மா அறக்கட்டளையினரால் கையளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களுக்கான சத்து உணவுத் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்:-ரவிசாந்)

## பன்னாட்டு குற்றங்கள் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இ.நா.ஸ்ரீ ஞானேஸ்வரன் எழுதிய பன்னாட்டு குற்றங்கள் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை நிலையத் தலைவர் பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

## நல்லூர் திருவிழாவில் களைகட்டிய காவடிகள்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தத் திருவிழாவான நேற்று முன்தினம் வழமையை விட அதிக எண்ணிக்கையில் காவடிகள் வருகை தந்ததை அவதானிக்க முடிந்தது.

நல்லூர்த் திருவிழா கொரோனாத் தொற்று காரணமாக கடந்த இரண்டு வருடாங்கள் பெரும்பாலான பக்தர்கள் இன்றி சாதாரணமாக நடைபெற்றது.

இந் நிலையில் மீண்டும் இம்முறை நல்லூர்த் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதனால் அதிகளவான பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக காவடிகளுடன் வருகை தந்திருந்தனர்.பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு காவடிகளுடன் மக்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## மாநாட்டு மண்டப திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் கோண்டாவில் கிழக்கு அமரர்.பொன்னையா நல்லையா நினைவாக அவருடைய மகன் நல்லையா பாஸ்கரனின் நிதிப் பங்களிப்புடன் குமரன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் பழைய மாணவர் தாய்ச்சங்கம் ஊடாக மீள் வடிவமைக்கப்பட்ட மாநாட்டு மண்டபத் திறப்பு விழா நாளை 29 ஆம் திகதி காலை 11.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் வி.இ.ஹஸ்ரன்றோய் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மாநாட்டு மண்டபத்தை நல்லையா பாஸ்கரன் வைபவரீதியகத் திறந்து வைக்கவுள்ளார். (4)

## உழவு இயந்திர சக்கரம் ஏறியதில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

உழவு இயந்திர பெட்டியின் சக்கரம் ஏறியதில் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ். சாவகச்சேரி - மீசாலை பகுதியில் இடம்பெற்றுள்ளது. உழவு இயந்திர பெட்டிக்கு கீழே தந்தை படுத்திருந்ததை அறியாத மகன் உழவு இயந்திரத்தை இயக்கியபோது சக்கரம் தந்தையின் இடுப்பு பகுதியால் ஏறியுள்ளதாக கூறப்படுகின்றது.

காயமடைந்தவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-104)

## பாலர் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் அ.மி.த.க. பாடசாலை மைதானத்தில் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-18)

## கோண்டாவில் இளைஞன் மீது உடுவிலில் வாள்வெட்டு

(அராலி)

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் நேற்று பகல் வாள்வெட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மீது ஒரு குழு ஒன்றினால் வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அமர்வுக்காகவேனும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படமாட்டார்களா?

இந்த நாடு இன்று இந்த நிலையில் இருப்பதற்கு பல தரப்பினர் பல்வேறு காரணங்களை சொன்னாலும் நாட்டில் நடந்த நீண்டகால யுத்தமே இன்றைய இந்த நெருக்கடிக்கு காரணமாக அமைந்துள்ளது என்ற உண்மையை எவரும் மறுத்துவிட முடியாது.

மிகச் சிறிய, அழகிய, இயற்கை வளங்கள் நிறைந்த நாட்டில் ஏன் இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படக் காரணம் என்ற கூற்றை தேடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இங்குதான் அரசியல்வாதிகளின் இனமத பேதத்தினூடான சுயநலம் வெளிப்பட்டிருக்கிறது.

இதன் விளைவே தமிழ் இளைஞர் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தியதும் அவர்கள் ஆயுதம் எடுத்ததற்கும் காரணமாகிறது.

அதன் பின்பு நடந்த அழிவுகள் கொஞ்ச நஞ்சமல்ல. பெரும் போரில் பெரிதும் பாதிக்கப்பட்டது தமிழினம் என்பதை மறுத்துவிட முடியாது.

தமிழினத்தின் விடிவுக்கான இளைஞர்களின் போராட்டத்தை ஒட்டுமொத்த தமிழினத்தின் போராட்டமாக பார்த்தார்கள் பேரினவாத ஆட்சியாளர்கள். அதனால் தமிழினத்தை பயங்கரவாதிகள் என்ற கண்கோட்டத்துடன் பார்த்தார்கள் என்பதற்கு போர் காலத்தில் தென் பகுதி விடுதிகளில் மேற்கொண்ட தேடுதல்களும் கைதுகளும் சான்றாக அமைந்திருக்கின்றது.

தவிர பயங்கர வாதத்தை அழிக்கின்றோம் என்ற போர்வையில் தமிழினத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் சாட்சியாய் முள்ளிவாய்க்கால் திகழ்கின்றது.



போர் மீறல்களும் அதற்கான ஆதாதரங்களும் வெளிவந்த போதிலும் அவ்வாறானதொரு போர் மீறலை யாரும் மேற்கொள்ளவில்லை என ஆட்சியாளர்கள் கூறுவதற்குள் இன பேதம் எவ்வாறுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

> ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்டது போல தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்களா என்றுதமிழினத்தின் மனங்கள் அங்கலாய்க்கின்றன.

இந்த நாட்டில் பூர்வீகமாக வாழ்ந்துகொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட தமிழனத்திற்கு தீர்வு வழங்குவதற்கு தடையாக இருக்கும் காரணியும் இன, மத பேதமே.

இவ்வாறான நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் கைதுசெய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இன்றி நீண்டகாலமாக சிறை வாசம் அனுபவித்து வரும் அரசியல் கைதிகள் தொடர்பில் நாம் சிந்தித்தே தீரவேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் நாட்டில் உருவாக்கப்பட்டதற்கான காரணமே தமிழினத்தை ஒடுக்கும் செயற்பாடாகவே கருதப்பட்டது. இதன் மூலம் பெரிதும் பாதிக்கப்பட்டதும் தமிழினம் மாத்திரமே.

ஆதலால் அதன் விளைவுகளை அறிந்திராத சிங்கள மக்கள் தற்போது பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கொடும் தாக்கத்தை உணரத் தொடங்கிவிட்டனர்.

ஆம் இன்று வரை பெரிதும் தமிழினத்தின் மீது பாய்ந்து கொண்டிருந்த பயங்கர வாதத் தடைச்சட்டம் இப்போது சிங்கள மக்கள் மீதும் பாய்ச்சப்பட்டிருக்கிறது.

இதன்பின்பே சிங்கள மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கோரத்தை உணர்ந்திருக்கிறார்கள்.

ராஜபக்ஷக்களுக்கு எதிரான போராட்டங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வன்முறை தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் பல சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். பட்டதன் பின்போ அவர்களுக்கு அதன் வலி புரிந்துள்ளது. அதனாலேயே பயங்கரவாதத் தடைசட்டத்தை உடன் நீக்க வேண்டும் என்ற கோசம் சிங்கள மக்களிடம் இருந்து எழத் தொடங்கியுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைவாசம் அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பொது மன்னிப்பில் விடுதலை செய்துள்ளார்.

அவரின் விடுதலைக்கு பலரும் ஆதரவு தெரிவித்துவரும் நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினூடே கைது செய்யப்பட்டு வருடக்கணக்காக சிறை வாசம் அனுபவித்த வரும் தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பினூடாக விடுதலை செய்யப்பட மாட்டர்களா என்ற ஏக்கம் தமிழினத்தை தொற்றிக் கொண்டுள்ளது. நாட்டின் ஜனாதிபதி நினைத்தால் அவர்களில் விடுதலை 24 மணி நேரத்தில் நிறைவேறி விடும். ஆனாலும் அவர்கள் தொடர்பில் ஆட்சியாளர்கள் சிந்திக்கவே இல்லை என்பதை எண்ணும்போது, இறைவா தமிழினம் பட்ட துன்பத்திற்கு மீட்சியே இல்லையா என்று எண்ணத் தோன்றுகிறது.

நீதிமன்றை அவமதித்த ரஞ்சன் ராமநாயக்காவை விடுதலை செய்தது போல நீண்ட நாட்களாக சிறைக் கம்பிக்குள் வெம்மி வெடிக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுதப்பாராயின் எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. அமர்வில் இலங்கைக்கான அழுத்தம் குறைய வாய்ப்புண்டு. இதற்காகவேனும் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே தமிழினத்தின் அவா.

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடிமாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியைக் குலைக்க விதானையார் விஸ்வலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:**

அதுசரி இந்தியாவின்ர நிதி உதவியோட யாழ்ப்பாணத்தில அமைக்கப்பட்ட கலாசார நிலையத்தை இன்னமும் கையளிக்கவில்லை எண்டு கதைக்கினம் என்ன சங்கதி?

**பண்டிதர்:**

இந்தப் பெரிய கலாசார மண்டபக் கட்டடத்தை ஆரிட்ட ஒப்படைக்கிறது எண்ட கேள்வி இந்தியாவிட்ட ஏற்படும் தானே!

**மூப்பர்:**

யாழ்ப்பாணம் மாநகர சபை தன்னட்ட ஒப்படைக்க வேணும் எண்டு கேட்குதல்லோ.

**வாத்தியர்:**

என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாண மாநகர சபையிட்ட கலாசார மண்டபத்தை ஒப்படைக்கிறது அவ்வளவு நல்லதல்ல.

**சாத்திரியார்:**

ஏன்? வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்.

**வாத்தியார்:** யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகம் என்பது அரசியல் சார்ந்தது. இன்றிருக்கிற முதல்வர் தான் தொடர்ந்தும் இருப்பார் என்று சொல்ல முடியாது.

அதே நேரம் ஆணையாளர் பதவி என்பதும் இலங்கை நிர்வாக சேவை சார்ந்தது. அதில யாரும் அமரலாம்.

ஆகையால யாழ்ப்பாண மக்களுக்காக இந்திய அரசாங்கம் அமைத்துக் கொடுத்த கலாசார மண்டபத்தை யாழ்ப்பாண மாநகர சபையிட்ட ஒப்படைத்துப் போட்டு பிறகு என்ன செய்யிறது.

**சிறாப்பர்:**

வாத்தியார் சொல்லுறதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது.

ஒரு முறை தமிழ் மக்கள் பேரவையின்ர கூட்டத்தை யாழ்ப்பாணப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில நடத்துவதற்கு யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் அனுமதி கொடுக்கவில்லை. பொறுப்பான பதிலும் அளிக்கவில்லை. இதற்கு மூல காரணம் அரசியல் விவகாரம் தான் என்பதை அறிய முடிஞ்சுது.

**வாத்தியார்:**

அதுதான் நடுநிலையோட நிண்டு யாழ்ப்பாண மாநகரசபை செயற்படுவது கடினம் என்பது தான் என்ர கருத்து.

**விதானையார்:**

அப்ப என்னதான் செய்யிறது.

**வாத்தியார்:**

தற்காலிக அரசி[illegible] கலப்பற்ற இன, [illegible] வேறுபாடு இல்லாத ஒரு தனியான கட்டமைப்பை உருவாக்கி அந்த அமைப்பிட்ட ஒப்படைக்கிறது தான் உத்தமம்.

அதோட குறித்த கட்டமைப்பின் செயற்பாடு பொது நீதிக்கு விரோதமாக இருந்தால், அதனைக் கலைக்கின்ற ஏற்பாடுகளும் புதிய நிர்வாகத்தை நியமிக்கின்ற அதிகாரமும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்திட்ட இருக்க வேணும். இல்லை எண்டால் கலாசார மண்டப நிர்வாகத்தில . ஊழலும் பக்க சார்பும் நடந்தேறும்.

**சாத்திரியார்:** இந்திய அரசாங்கத்தால அமைத்துத் தரப்பட்ட யாழ்ப்பாணக் கலாசார மண்டபமானது முன்பு திறந்த வெளியரங்கு இருந்த இடத்திலதான் அமைக்கப்பட்டுள்ளது.

தளத்தில கம்பிரமாக நடராஜர் சிலை இருந்தது.

ஆனால் இப்ப அந்த சிலை அகற்றப்பட்டு விட்டமைதான் வேதனையிலும் வேதனை.



## எங்கட தொன்மையை அறிய அகழ்வாராய்ச்சி தேவை

**பண்டிதர்:**

ஓ! இலங்கையில விட்டுக் கொடுக்கிறதுக் கென பிறந்தவர்கள் தானே சைவத் தமிழர்.

எங்கட அடையாளங்களை விட்டுவிட்டு இப்ப எல்லாத்தையும் இழந்து நிற்கிறம்.

**மூப்பர்:**

என்ன பண்டிதர் சொல்லுறியள்.

**பண்டிதர்:**

எங்கட அடையாளங்களை நிரூபிக்கிறதா இருந்தால், எங்கட தொல்லியல் சான்றுகள் இருக்கக் கூடிய இடங்களில அகழ்வாராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும். ஆனால் அது பற்றி எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

**சிறாப்பர்:**

பண்டிதர் ஐயா கொஞ்சம் விளங்கக் கூடியதாகச் சொல்லுங்களன்.

**பண்டிதர்:**

அந்நியர்களால் எங்கட சைவ ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டதோட அந்த இடங்கள் கபளீகரம் செய்யப்பட்டன என்பது வரலாறு.

இப்படி சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட இடங்களில அகழ்வாராய்ச்சி செய்தால், எத்தனையோ சான்றுகள் கிடைக்கும்.

அதிலும் தெய்வ விக்கிரகங்கள் கூட கிடைக்கக்கூடிய சாத்தியம் இருக்குது.

எனவே அந்நியர்களால் உடைத்து அழிக்கப்பட்ட சைவாலயங்கள் இருந்த இடங்களில அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேணும் எண்டு ஆலடியில ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவம்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் அனைவரும் அந்தத் தீர்மானத்தை ஏக மனதாக ஏற்றுக்கொள்ள, ஆலடியில் அந்த தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானம் நிறைவேறியதும் ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க சிறாப்பர் கனக சபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:**

எங்கட யாழ்ப்பாணம் செம்மணிச் சந்தி சுவாமி விவேகானந்தர் வந்திறங்கின இடம். அது தவிர, நல்லூர்க்கந்த சுவாமி கோயில் நுழைவாயிலும் அதுதான். அதோட சிவலிங்கப் பெருமான், பிள்ளையார் கோயிலென ஒரு புனிதமான சூழல் இருக்கும் போது, அந்த இடத்தில அதிலும் செம்மணிச் சந்தியில இருக்கிற பிள்ளையாருக்கு அருகில வைத்து மீன் வியாபாரம் நடக்குது.

இது தொடர்பில அந்த இடத்துக்குரிய உள்ளூராட்சி சபை நடவடிக்கை எடுக்க வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பதுபோல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தையின் சிரிப்பில் நாம் காண்பது எதை வியாசரே ?






தமிழ் மக்களுக்காக விசேடமாக பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் சிங்களவர்கள் மீதும்

**தினகரன் யாழ்ப்பாணம்**

**உலக அழிவு என்கிறார்களே, அதற்கு சாத்தியம் உண்டா வியாசரே?**

உலக அழிவு என்பது கலியுகம். இந்தக் கலியுகத்தில் மனச்சாட்சிக்கு இடமே இருக்காது.மனிதாபிமானம் என்பது மருந்துக்கு மிருக்காது.

பணம்,பெயர்,புகழ் என்கின்ற மாயைக் காய் கடைநிலைவரை செல்லும் மனித குலம் வாழும் பாரே கலியுகத்தின் பூமி யாகும்.

மேற்குறித்த குணங்களைக் கொண்ட மனிதன் அழிந்தாலென்ன வாழ்ந்தாலென்ன.

**சிவம் வதிரி**

**கடவுள் இருக்கிறார் என்பதை எப்படி நம்ப முடியும் வியாசரே?**

கடவுள் என்றறொரு சக்தி உண்டென்பதை மற்றவர் சொல்லி விளங்கிவிட முடியாது. இதை மனதால் உணர்ந்து கொண்டாலே புரிந்து கொள்ள முடியும்.உங்கள் வாழ்வில் ஒருமுறையேனும் கணப்பொழுதில் ஆபத்திலிருந்து தவறிய சந்தர்ப்பத்தை நினைத்துப் பாருங்கள்.

இதுவே இறைவன் என்கின்ற மேலான சக்தி. அந்த உன்னத சக்தியை உணர்ந்தவர்கள் மட்டுமே இறைவனை உணரமுடியும்.

**அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்**

**சுதன் குப்பிழான்**

**தமிழ் மக்களுக்காக விசேடமாக பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் சிங்களவர்கள் மீதும் பாய்ச்சப்படுகிறதே?**

இதைத்தான் வதி வலியது என்பார்கள். பேரினவாத ஆட்சியாளர்களின் சட்ட அடக்குமுறைக்குள் சிக்குண்டு தமிழினம் என்ன பாடுபட்டதோ அதேபாட்டை இன்று சிங்கள மக்கள் படுகிறார்கள்.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் தமிழினத்தின் பாட்டை உணர்ந்திருக்கின்றார்கள்.

அதனாலேயேஅவர்கள் மனங்களில் தமிழினத்திற்கான தீர்வை வழங்க வேண்டும் என்ற மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**இதழினி புலோலி**

**அன்று பாசத்தால் கட்டுண்ட சொந்தங்கள் இன்று பணத்தால் கட்டுண்டுள்ளார்களே?**

பணம் பாதாளம் வரை பாய வல்லது. இதற்கு நல்ல உதாரணம் உங்கள் மோட்டார் சைக்கிள்களை புகைப் பரிசோதனைக்குக் கொண்டு செல்கிறீர்கள் தானே.

அதில் உங்கள் மோட்டார் சைக்கிள் சித்தியடையவில்லை என்ற முடிவு வந்தால். அன்பாய் சித்தியடையச் செய்யுங்கள் என்று கேட்டுப் பாருங்கள். அதற்கு வாய்ப்பே இல்லை. ஐந்நூறை வெட்டி எறிந்து பாருங்கள் ஐந்து நிமிடத்தில் சித்தியடைந்த துண்டு உங்களைத் தேடி வரும்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தமிழினி வதிரி**

**தமிழினத்திற்கு சுதந்திரமே கிடைக்காதா வியாசர் மாமா?**

நடக்காத விடயம் பற்றி நாம் பேசிப் பயன் இல்லையே? தமிழினம் பாவப்பட்ட இனம். பாவம் செய்த இனம்.

அதனால் தான் இப்பிறப்பில் நன்றாக அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

தமிழினமாய் பிறந்தது எங்கள் தவறல்ல. இது இறைவனின் தீர்ப்புக்குரியது.

ஆனால், ஒன்று மட்டும் உண்மையானது இந்த உலகையே ஆட்சி செய்த இனம் தமிழினம் என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

**மதுவன் மீசாலை**

**குழந்தையின் சிரிப்பில் நாம் காண்பது எதை வியாசரே ?**

குழல் இனிது யாழ் இனிது என்பர் நம் மக்கள் மழலைச்சொல் கேளாதோர். என்றொரு ஆன்றோர் மொழியுண்டு.

அதாவது இந்த உலகில் குழல் இசை இனிதென்றும் யாழ் இசை இனிதென்றும் கூறுவோர்கள் ஒருநாளும் மழலைச் சொல் கேட்டிராதவர் என்பதே அதன் பொருள்.

உலகில் தீராத நோய்களையெல்லாம் தீர்க்க வல்லது மழலைச் சிரிப்பு எனும் அரு மருந்து.

**தீரன் மானிப்பாய்**

**உங்களுக்கு முன்பு பிடித்த விடயம் ஒன்று தற்போது பிடிக்காமல் இருக்கிறது என்றால் எதைக் கூறுவீர்கள் வியாசரே?**

சிறுவயதில் ஆசிரியர் படி படி என்று அடித்தார்.படி, படித்தால்தான் வாழ்வில் உயர்வாய் என்று பெற்றோர் அறிவுரை கூறினர். ஆனாலும் அந்த அறிவுரைகளிலும் பம்பலடிப்பு நன்றாக இருந்தது.

அன்று அந்த அறிவுரைகளைக் கேட்டிருந்தால் இன்று உங்கள் கேள்விக்கு பதில் எழுதும் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது.

ஆயினும் என்ன செய்ய விதிப்பலன் என்பதிலும் சொல் பேச்சு கேளாமை என்பதே பொருத்தமானது.

இனி என்ன செய்ய இனிமேல் நம்மால் பரீட்சை எழுத முடியாதே.

**தேஜன் சாவகச்சேரி**

**சொந்தங்கள் பிரியும் போது கவலைப்படுகின்றோம். ஆனால் சில காலங்களிலேயே அந்த சோகம் மறைந்து விடுகின்றதே?**

மனிதருக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட அருமருந்து மறதி.

மறதி என்கின்ற ஒன்று மனிதனிடம் இல்லாதிருந்தால் இன்று மனித குலம் மனநலம் குன்றிய இனமாகவே வாழ்ந்து கொண்டிருக்கும்.


சோகங்கள்,வலிகள் வரும்போது துவண்டு போகும் மனிதன். அதைக் கடந்து போக மறந்துபோய் இயல்பாகி விடுகிறான்.

இதுவே உலக நியதி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : சிம்லா ஸ்பெஷல்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்ரமணியம்



தக தின தக ததிந்தோம்....
தக தின தக ததிந்தோம்
தக தின தக ததிந்தோம்
ததோம் ததோம் த தகதின தோம்
ததோம் த தகதின தோம் ததோம் த தகதின தோம்

உனக்கென்ன மேலே நின்றாய் ஓ நந்தலாலா
உனக்கென்ன மேலே நின்றாய் ஓ நந்தலாலா
உனது ஆணை பாடுகின்றேன் நான் ரொம்ப நாளா
உனக்கென்ன மேலே நின்றாய் ஓ நந்தலாலா

தாய் மடியில் பிறந்தோம்
தமிழ் மடியில் வளர்ந்தோம்
நடிகரென மலர்ந்தோம்
நாடகத்தில் கலந்தோம்
தக தின தக ததிந்தோம்
ததோம் ததோம் த தகதின தோம்
ததோம் த தகதின தோம்
ததோம் த தகதின தோம்

ஆடாத மேடை இல்லை
போடாத வேஷம் இல்லை
ஆடாத மேடை இல்லை
போடாத வேஷம் இல்லை
சிந்தாத கண்ணீர் இல்லை
சிரிப்புக்கும் பஞ்சம் இல்லை
கால் கொண்டு ஆடும் பிள்ளை
நூல் கொண்டு ஆடும் பொம்மை
கால் கொண்டு ஆடும் பிள்ளை
நூல் கொண்டு ஆடும் பொம்மை
உன் கையில் அந்த நூலா
நீ சொல்லு நந்தலாலா

யாராரோ நண்பன் என்று
ஏமாந்த நெஞ்சம் உண்டு
யாராரோ நண்பன் என்று
ஏமாந்த நெஞ்சம் உண்டு
பூவென்று முள்ளைக் கண்டு
புரியாமல் நின்றேன் இன்று
பால் போலக் கள்ளும் உண்டு
நிறத்தாலே ரெண்டும் ஒன்று
பால் போலக் கள்ளும் உண்டு
நிறத்தாலே ரெண்டும் ஒன்று
நான் என்ன கள்ளா பாலா
நீ சொல்லு நந்தலாலா

தக தின தக ததிந்தோம்
ததோம் ததோம் த தகதின தோம்
ததோம் த தகதின தோம்
ததோம் த தகதின தோம்

உனக்கென்ன மேலே நின்றாய் ஓ நந்தலாலா
உனது ஆணை பாடுகின்றேன் நான் ரொம்ப நாளா

உனக்கென்ன மேலே நின்றாய் ஓ நந்தலாலா

# நாடே இல்லாத ராஜ்ஜியம்; அதிகாரமே இல்லாத மன்னர்

நாடே இல்லாத ராஜ்ஜியம் அதிகாரமே இல்லாத மன்னர் இருந்தும், அரியணைக்காக நடக்கும் சண்டைகள்... இதைக் கேட்கும்போது ஒரு விடுகதைக்கான கேள்விபோல இருக்கலாம். ஆனால், உண்மையிலேயே இப்படியான விடயங்கள் தான் தென்னாபிரிக்காவிலுள்ள குவாஜூலு-நடால்மாகாணத்தில் நடந்துகொண்டிருக்கின்றன. அந்த மாகாணத்திலுள்ள ஜூலு பழங்குடி இனத்துக்கென தனி நாடோ, எல்லையோ, அரசு அதிகாரமோ கிடையாது.

ஆனாலும், அந்த இனக் குழுவுக்கான 'மன்னர் அரியணைக்காக' மிகப்பெரிய சண்டைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஓராண்டுக்கு மேல் நீடித்த இந்த அரியணைச் சண்டையில், மறைந்த மன்னர் குட்வில் ஸ்வெலிதினியின் மூன்றாவது மனைவி வழி மகன் மிசுஜூலு ஸ்வெலிதினி வெற்றி பெற்றிருக்கிறார். புதிய மன்னர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால், குவாஜூலு-நடால் மாகாணத்தில் ஆட்டம் பாட்டமெனக் கொண்டாட்டம் களை கட்டினாலும், சண்டைகளும் ஒருபக்கம் நடந்தபடியிருக்கின்றன!

தென்னாபிரிக்காவின் பெருமைமிகு பழங்குடி இனக் குழுக்களுள் ஒன்றுதான் ஜூலு. 1800 களில் உலகின் வலிமை மிகுந்த இனக்குழுக்களுள் ஒன்றாக இருந்தது. 1816 இல் தனது சகோதரனைக் கொன்று, ஜூலு இனக்குழுவின் மன்னரானார் ஷாகா கா சென்சங்கோனா.

ஆங்காங்கே சிதறிக்கிடந்த ஜூலு மக்களை ஒருங்கிணைத்து எல்லைகளை வரையறுத்து ஜூலு ராஜ்ஜியத்தை முறையாக உருவாக்கியது ஷாகாதான். அவரது 12 ஆண்டு கால ஆட்சியில்தான் ஜூலு இனக்குழுவின் படைபலம் வலிமை பெற்றது. 1828 இல், அரியணைக்காகத் தனது மருமகனால் கொலை செய்யப்பட்டார் ஷாகா.

1879இல், தங்களது ராஜ்ஜியத்துக்கு எதிராகப் படையெடுத்து வந்த பிரிட்டிஷ் துருப்புகளை ஓட ஓட விரட்டியது ஜூலு படை. இந்த வெற்றி ஜூலு இனக்குழுவை உலக அளவில் புகழ்பெறச் செய்தது. எப்போதுமே ஜூலு இனக்குழுவின் அரியணைக்குக் கடும் போட்டியும் மோதல்களும் நிலவும். இந்த மோதல்களில், பல தலைகள் உருண்ட வரலாறும் உண்டு. தென்னாபிரிக்கா ஜனநாயக நாடாக மாறிய பின்னர், ஜூலு இனக்குழுவுக்கான அதிகாரங்கள் பறிபோயின. தனி நாடு கேட்டு நடத்தப்பட்ட போராட்டங்களும் தோல்வியில் முடிந்தன.

தற்போதைய நிலவரப்படி, தென்னாபிரிக்காவில் சுமார் 1.2 கோடி ஜூலு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இது, அந்நாட்டின் மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு. எனவே, யார் ஆட்சிக்கு வந்தாலும் ஜூலு இனக் குழுவுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். தென்னாபிரிக்க பாராளுமன்றத் தேர்தல்களில், ஜூலு மக்களின் வாக்குகள் மிக முக்கியமானவை. ஜூலு மக்கள் மத்தியில் மன்னருக்கு அதீத செல்வாக்கு உண்டு என்பதால், அரசியல் கட்சிகள் அரியணையிலிருப்பவர்களுக்கு உரிய மரியாதை வழங்குவது தற்போது வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. மேலும், ஜூலு மன்னருக்குக் கீழ் இயங்கும் அறக்கட்டளைக்கு ஏராளமான சொத்துகளும் உண்டு.



சரி, நிகழ்காலக் கதைக்கு வருவோம்... 1968 இல் ஜூலு இனக்குழுவுக்கு மன்னரான குட்வில்லுக்கு மொத்தம் ஆறு மனைவிகள். அந்த ஆறு பேரில், மூன்றாவது மனைவியான ம்ன்ட்ஃபோம்பி, ஜூலு இனத்தைச் சேர்ந்தவராக இல்லாவிட்டாலும், உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தார்.

காரணம், இவர் ஸ்வாஸி y he;J (Swaziland) இராஜ குடும்பத்திலிருந்து வந்தவர். கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில், கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தார் குட்வில். அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட கையோடு, யார் அடுத்த மன்னர் என்பதற்கான சண்டைகள் தொடங்கின.

இந்த நிலையில், ராணி மன்ட்ஃபோம்பி அடுத்த மன்னரைத் தேர்வுசெய்யலாம் என்று குட்வில் எழுதிய உயில் ஒன்று கிடைத்தது. அனைவரும் எதிர்பார்த்தபடி தன் மகன் மிசுஜூலுவைக் கைகாட்டினார் மன்ட்ஃபோம்பி. ஆனால், குட்வில்லின் மேலும் இரண்டு வாரிசுகள் அரியணைக்குப் போட்டிபோட, ஆட்டம் சூடுபிடித்தது. மன்னரின் வாரிசுகளான சிமாகடே ஸ்வெலிதினியும் புஸாபஸி ஸ்வெலிதினியும் "மன்ட்ஃபோம்பி, எஸ்வாதினி இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், மிசுஜூலுவை 100 சதவிகிதம் ஜூலு இனத்தைச் சேர்ந்தவராக ஏற்றுக் கொள்ள முடியாது. அதனால்மன்னராக அவர் இருக்கக் கூடாது" என்றனர்.

'சிமாகடேதான் மன்னரின் மூத்த மகன். எனவே, அவர் தான் மன்னராக வேண்டும்' என்று ஒரு தரப்பினரும் 'மன்னருடன் மிக நெருக்கமாக இருந்த புஸாபஸிதான் அடுத்த மன்னராக இருக்க முடியும்' என்று மறு தரப்பினரும் வாதிட்டனர். 'அரச குடும்பத்தில் வலுவான ஆதரவு பெற்றிருக்கும் மிசுஜூலுதான் மன்னராக வேண்டும்' என்று மன்ட்ஃபோம்பியின் ஆதரவாளர்கள் எதிர்வாதம் செய்ய, மூன்றாகப் பிரிந்தது மன்னர் குடும்பம். இந்த விவகாரம் பெரிதாகவே, தென்னாபிரிக்க அரசு இதில் தலையிட்டது. 'உயிலில் சொல்லப்பட்டிருக்கும்படி மிசுஜூலுவைப் புதிய மன்னராக அங்கீகரிக்கிறேன்' என்றார் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ராமஃபோசா. இதை எதிர்த்த மன்னரின் மற்றொரு மகனான எம்போனிசி உயர் நீதிமன்றத்தை நாட, தீர்ப்பு மிசுஜூலுவுக்குச் சாதகமாக வந்தது.

இதையடுத்து, ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஜூலு இனத்தின் புதிய மன்னராகத் தன் குடும்பத்தினர் முன்னிலையில் முடிசூட்டிக் கொண்டார் மிசுஜூலு. கோலாகலமாக நடந்த இந்த விழாவை நிறுத்தக் கோரி, மிசுஜூலுவின் சகோதரிகள் சிலர் நீதிமன்றத்தில் அவசர மனுத்தாக்கல் செய்தனர். அதில், 'தந்தையின் உயில் போலியானது' என்று சொல்லப்பட்டிருந்தது. அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. தென்னாபிரிக்காவின் 'பாரம்பரிய தினமான' செப்டம்பர் 24 அன்று, மக்கள் மத்தியில் மிசுஜூலுவுக்கு முடிசூட்டுவிழா நடத்தப்படவிருக்கிறது. அந்த விழாவுக்குள்ளாக, குடும்பச் சண்டைகள் ஓய்ந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனநாயக நாடுகளிலேயே அதிகாரத்துக்காகப் போட்டியும் மோதல்களும் நிலவும்போது, பல நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஜூலு இனக்குழுவில் நடக்கும் அதிகாரச் சண்டைகளில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லைதானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

"மாஸ்டர்" என்றபடி அவரது தோளைத் தொட்டபோது, ராகவன் மாஸ்டர் இரண்டு துண்டுகளாக உடைந்து நிலத்தில் விழுகிறார்.

"மாஸ்டர்" என்றபடி பாய்ந்து குனிந்த நீதன், கட்டிலில் வியர்த்து மூச்சு வாங்கியபடி எழுந்திருந்தான். வெளியில் இப்போது இருட்டியிருந்தது. தூரத்து வெளிச்சமும் ஜன்னலின் வழியாக அறையில் கடைசியாக, வயல்வெளியில் தன்னைத் திரும்பிப் பார்த்துவிட்டுப் போன அந்தப் பார்வையை அந்தப் படத்தில் அவனால் காணமுடியவில்லை. லியோவின் படம் முழுதாகவே கிழிந்து, அவனது கால் பகுதி மாத்திரம் கசங்கிக் கிடந்தது.

திடீரென்று குயிலனின் குழந்தையின் நினைவுகள் முகத்தில் அறைந்தது போலிருந்தது. கட்டிலிலிருந்து துள்ளியெழுந்தான். மீண்டும் ராதாவோடு பேசிய அனைத்துமே நினைவிலிருந்து சுருள் சுருளாக இதயத்தில் தாவித் தாவி மேல் எழுந்துகொள்வதை நீதன் உணர்ந்தான்.

வாழ்க்கையின் அடுத்த அந்தத்திலிருந்து அவள் தன்னை அழைத்துக்கொள்ளும் சத்தங்கள் மிகத் தெளிவாக அவனுக்குக் கேட்கக் கூடியதாயிருந்தன.

**கையில் வைத்திருந்த தேநீர்க்குவளை நீதனின் கட்டுப்பாட்டை மீறி நடுங்கியது.ராதா வந்து போனது கொஞ்சம் கொஞ்சமாக நினைவில் மேலெழத் தொடங்கியது. அவளது கரங்கள் வருடிய தருணங்களும் கடைசியாகப் போகும்போது கன்னத்தில் முத்தமிட்டுச் சென்றதும் இப்போது அழுத்தமாக நினைவில் வரத் தொடங்கியது.**

## வலி சொல்லும் தொடர்... 45

விழுகிறது. கூடவே கொஞ்சம் காற்றும்.

எழுந்து சென்று அறை லைட்டைப் போட்டான்.

தாதியர்கள் வைத்துவிட்டுப் போன மாத்திரைகளும் பிளாஸ்திக் குடுவையில் தண்ணீரும் மேசையில் அப்படியே இருந்தன:

களைத்துப்போன உடலில், மூச்சு வேகமாக ஏறி இறங்கியது. குடுவையிலிருந்த தண்ணீரை எடுத்து, தொண்டையில் நேரடியாக ஊற்றினான்.

தனக்குள் நொதித்துக்கிடக்கும் அமிலத்தைக் கரைத்துக் கொண்டு போவதுபோல, தண்ணீர் வேகமாக உள்ளே இறங்கியது. உடல் மீண்டும் சமநிலை அடைவது போன்ற உணர்வு, தசையெங்கும் பரந்தோடுவது புரிந்தது.

கட்டிலில் இருக்கப்போனபோது தான் பார்த்தான். தலைப்பக்கமாக சுவரில் ஒட்டியிருந்த படம் கிழித்து, கசக்கி, கட்டிலில் துண்டு துண்டாகக் கிடந்தது. மீண்டும் தலைசுற்றியது. குடித்த தண்ணீர் வயிற்றில் கொந்தளிப்பதுபோலிருந்தது.

கைகளைப் பார்த்தான். தனது வலது கை விரல்கள் எங்கும் சுவரைப் பிராண்டியதில் பெயின்ட் துகள்கள் ஒட்டிக்கிடந்தன.

தலையணைப் பக்கமாகக் கசங்கிப் பிய்ந்து கிடந்த படத்தை எடுத்து, மீண்டும் ஒட்டினான். கட்டிலில் விரித்துப் பார்த்தான். முடியவில்லை. அனீஸாவின் முகம் முற்றாகவே சிதைந்திருந்தது. வியர்த்தது.

வெளியில் ஆட்கள் நடக்கும் சத்தம் கேட்டது. இந்த அறை அவனுக்குத் திடீரென்று அந்நியமாகி விட்டதுபோலிருந்து. இந்த அறையில் இதுநாள் வரைக்கும் தன்னுடனிருந்தவை அனைத்தும் வெளியேறி விட்டது போலிருந்தது.


நீதன் அறைக்கு வெளியில் போனான். 'அல்பா கம்பவுண்ட்' இருளின் அமைதியில் தூங்கிக் கொண்டிருந்தது. ஒரேயொரு உத்தியோகத்தர் மாத்திரம் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தார்.

பைப்பில் கொதிநீர் எடுத்து, தேநீர் ஊற்றினான். வெளியில் போனபோது, வழக்கமாக வரவேற்கும் காற்றுக்கூட அங்கில்லை. புழுக்கமாக இருந்தது. மைதானத்துக்கு இறங்கி, வட்டமாக நடக்கத் தொடங்கினான்.

முழு உடம்பிலும் ஏதோவொரு நிரந்தரப் பதற்றம் ஏறிவிட்டது போன்ற நடுக்கம் கால்களிலும் தெரிந்தது.

கையில் வைத்திருந்த தேநீர் குவளை நீதனின் கட்டுப்பாட்டை மீறி நடுங்கியது.

ராதா வந்து போனது கொஞ்சம் கொஞ்சமாக நினைவில் மேலெழத் தொடங்கியது. அவளது கரங்கள் வருடிய தருணங்களும் கடைசியாகப் போகும்போது கன்னத்தில் முத்தமிட்டுச் சென்றதும் இப்போது அழுத்தமாக நினைவில் வரத் தொடங்கியது. மஞ்சள் நிற சல்வாரில் அவள் பக்கத்திலேயே நடந்து வருவது போலிருந்தது.




அவளது குரலின் ஒலியும் தெளிவும் சீராக நீதனுக்குள் இறங்கின.

சற்று நிமிர்ந்து பார்த்தான். ஓங்கி வளர்ந்த இரும்பு மரங்கள்போல முகாம் வேலிகளில் தொங்கிய மின்குமிழ்கள் சீரான இடைவெளியில் வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி தெரிந்தன. இருளில் இன்னும் திமிராகவே நிமிர்ந்து நின்றன. ஜனநாயகம், நீதி, சமத்துவம் என்று சொல்லப்படுகின்ற எல்லா கண்றாவிகளையும் காறித்துப்பிவிட்டு, பொய்களின் பொது மரமாக ஓங்கி வளர்ந்திருப்பது போல அந்தக் கம்பி வேலிகள் தெரிந்தன.

இந்த வேலிக்கு அப்பால் போய் சேர்வதற்கு எது செய்தாலும் தவறில்லை. எதுவுமற்ற என் கையில் எந்த ஆயுதத்தை ஏந்தினாலும் பிழையில்லை.

நீதனின் மனம் திடமானது. அந்த இரும்புவேலிகளைப் போலவே தானும் திமிரோடு நிமிரும் உணர்வு அவனுக்கும் இறுக்கமாகப் பரவியது.

[illegible]க்குப் பிறகு முதல் நாள் காலை வேலைக்குப் போயிருந்தேன்.

முதல்நாள் இரவு வேலை செய்த முகாமின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் காலையில் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். தங்களுடன் கொண்டு திரிந்த சாவிக்கொத்துகளை வாசலிலுள்ள பெட்டியில் செருகிவிட்டு, ரேடியோ கருவிகளை சார்ஜர்களைப் பொருத்திவிட்டு வாசல் பக்கத்தால் ஒவ்வொன்றாக வெளியேறிக்கொண்டிருந்தார்கள்.

பகல் வேலைக்கு வந்தவர்கள் தமக்குரிய சாவிகள், ரேடியோ கருவிகளோடு, பணி தொடங்குவதற்கு முன்னரான 15 தகவல் அறிவிப்புக் கூடத்தில் குழுமியிருந்தார்கள்.

முதல்நாள் இரவுப் பணிக்குப் பொறுப்பாயிருந்த ஸ்ருவேர்ட் எங்களது பகல் வேலைக்குரிய முக்கியக் குறிப்புகளைப் பதிவேட்டில் எழுதியிருந்தான். உரிய நேரத்து மருந்து உட்கொள்ளாதவர்கள், உணவு மண்டபத்துக்கு வந்து சாப்பிடாதவர்கள், நீண்ட நேரம் சந்தேகத்துக்கிடமான வகையில் தனியாக முகாமுக்குள் யோசனையில் அலைந்தவர்கள் என்று பல அவதானிப்புகள் இந்தப் பதிவேட்டில் எழுதப்படுவது வழக்கம்.

எல்லாவற்றையும் விட வேறொன்று குறித்து, ஸ்ருவேர்ட் அன்று காலை என்னுடன் தனியாகப் பேச வேண்டுமென்றான்.

அல்பா கம்பவுண்டுக்கு வெளியே இருவரும் வந்தோம். சிகரெட் ஒன்றை எடுத்து வாயில் பொருத்தி தூபமிட்டான். களைத்த விழிகளில் வழிந்த தூக்கத்தைக் கழுவிக் கொண்டு சிகரெட் புகை மேலெழுந்து போனது.

"நீதனின் நிலவரம் அவ்வளவு சரியில்லை." அவுஸ்திரேலிய புலனாய்வுப் பிரிவினரது சந்திப்பு தொடர்பாக நீதன் குழப்பமடைந்திருப்பது குறித்து ஸ்ருவேர்ட் பேசுவதாக எண்ணிக்கொண்டேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிம்மதி சாத்தியம்

வாழ்க்கையில் நிம்மதி நிலவினால்
சுகமான வாழ்வு அமையுமே
சுகமான வாழ்வைத் தேடித்
தினம் அலைகின்றோமே
குடும்பத்தில் நிம்மதிக்
காற்று வீசினால் =இன்பமானதே
சமூகத்தில் நிம்மதி கெடுமானால்
கலக்கம் ஏற்படுமே

மானிடத்தின் நிம்மதி மனதில் தான் உண்டல்லவா
மனதைத் தொலைத்துவிட்டால்
நிம்மதி குலைந்திடுமே
நிம்மதியைக் கெடுக்க
நாலு பேர் முயற்சிக்கலாம்
விடயத்தைப் பெரிதாக்கினால்
நிம்மதி தொலைந்திடுமே

நிம்மதி சிதையுமாகில்
இறைவனிடம் நாடிட வேண்டும்
உறவுகள் உருக்குலையும்
நிம்மதியை சீர்செய்திட வேண்டும்
பரந்த சிந்தனைகள் பலதையும் தீர்த்திடும்
நினைத்தது நிறைவேறிட
நிம்மதி அவசியமாகிறதே.

எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## என் அம்மாவை போல் வருமா?



உடல் தந்தாய்
உயிர் தந்தாய்
உயிர் வாழ
உதிரம் தந்தாய்

மொழி தந்தாய்
கலையாத கல்வி
தந்தாய்
வழி தந்தாய்
வாழ்வதற்கு
அன்பு மழை பொழிந்தாய்
அயராது கண் விழித்தாய்

நல்வாழ்வு வாழ்வதற்கு
ஓயாமல் சுழல்கின்ற
பூமி என்ற நாடக அரங்கிலே
ஆயிரம் உறவுகள்
அணைத்து எடுத்தாலும்
அவையாவும்
என் அம்மாவை
போல் வருமா

மண்டைதீவு,
எஸ்.கலாமணி.

## பொய்மைகள்

துதி பாடி வாழ்பவர்
வாழ் வியலில் ஒருபோதும்
கதி பெற்று உயர்ந்தாரில்லை
விதியோடு விளையாடும்
மதி பெற்ற மனிதர்க்கு
கதி எதுவும் வாய்ப்பதில்லை

புதிருக்குள் புதிரான
புரவலர் வாழ்முறையில்
உண்மைகளும் வாழ்வதில்லை
சிந்தையில் மதுவிரும்பிச்
சிவசிவ என்பவர் தம்
பொய்மைகள் வீழ்ந்து விடும்.

உழைப்பாளர் நலம்பேசி
சுரண்டிப் பிழைப்பவர்
வாழ்வும் நிலைப்பதில்லை
ஏச்சுப் பிழைப்போர் தம்
பொய்மைகள் புவி மீது
என்றென்றும் வாழ்ந்ததில்லை

உண்மைக்கும் பொய்மைக்கும்
மெருகிட்டு பூச்சிடினும்
தன்மைகளில் ஒன்று சேரா
உண்மைகள் எனக் கூறி
மோசடிகள் செய்திடினும்
பொய்மைகள் வெல்வதில்லை

வளவை வளவன்

## மௌனத்தின் தேடல்- 572



## எழுந்து வா

பெயருக்கு மட்டும் அகதி முகாம்
உண்மையில் இது வதைமுகாம்
உன்னுயிருக்கும் இங்கு
உத்தரவாதம் இல்லை
கம்பி வேலியை இன்று கடந்து போ
நாளை விடுதலை வீரனாய் எழுந்து வா

பிரமன்,
கொக்குவில்.

## பாவத்தை கழுவ...

முட்கம்பி வேலிக்குள்ளே எம் உணர்வுகளை
முடக்கி வைத்த கொடுமை இப்போ
பட்டென நீதி காட்டும் பாவத்தை
கழுவ எண்ணில் தலையும் தப்பித்தான்
ஓட வேண்டும் காலை ஒப்புக்கும் பூமி
பந்தில் வைக்க உடன்பட்டதெந்த நாடு
மனுநீதிக்கு உடனுக்குடன்
வழங்கும் சேதி இது.

கார்வண்ணன்,
காவலூர்.

## அன்பின் பிணைப்பு

அப்பா என்ற மூன்றெழுத்துக்கு இலக்கணமாய்
அன்பு பிள்ளை தனை கைகளில் ஏந்தி
அகதியாய் அகப்பட்டு அநாதை ஆன போதிலும்
ஆசையாய் முத்த மழை பொழிகின்ற
தந்தையின் அன்பின் முன்
அனைத்தும் போலியே!

ஆ.பாலமதுஜா,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

## தவிப்பு

தாய் தன் குழந்தையை
தவிப்புடன் விடுகிறார்
தன் நாட்டையும் இனத்தையும்
நாளை காப்பான்
என்ற நம்பிக்கையில்

பிரகவி,
கொக்குவில்.

## அவலம்

போரின் அவலமும்
புலம் பெயர்வும்
நமக்கு மட்டுமல்ல;
பணம் படைத்த நாகரீக
மக்களுக்கும் தான்.

பி.மதுவர்தன்,
தையிட்டி.

## மௌனத்தின் தேடல்- 573



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அகதி வாழ்வு

அறியாமை செய்கின்ற
அகங்காரம் அதிகார
வர்க்கத்தின் அநியாயம் போர்
உரிமைகள் உடைமைகள்
பறிப்பு பாவிகள்
நெஞ்சினிலே களிப்பு
பாலகர் முதியவர் தவிப்பு
பாதைகள் எங்கும்
முட்கம்பி அடைப்பு
நம்பிக்கை இல்லா
அகதி வாழ்வு
நாட்டுச் சுதந்திரம் வேண்டி,
இறைவனிடம் காப்பு

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.


## ஆதிக்கத் திமிரால்

நாடுகளை ஆளும் அதிகார
வர்க்கத்தின் வேணவாவினாலும்
மேட்டுக்குடியினரின்
ஆணவச் செயல்களினாலும்
உறவுகளை தொலைத்தவர்கள்
இல்லிடத்தை இழந்தவர்கள்
பொருளாதாரத்தில் நலிந்தவர்கள்
அக்கரைகள் பச்சையென
ஆபத்துக்கள் நிறைந்ததென தெரிந்தும்
திருட்டுத்தனமாய் எல்லை தாண்டும்
அவலங்கள் தொடர்கின்றன.

சி.இ.அன்புதுரை,
சம்மட்டியோலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் தொழில்திறன் அதிசயங்கள் - பகுதி 2



1936 இல் இந்த அணை கட்டி முடிக்கப்பட்டபோது இதுவே உலகின் பெரிய கான்கிரீட் கட்டடமாகவும் அதிகம் மின்னுற்பத்தி செய்யம் நீர் மின் நிலையமாகவும் உயரமான இடத்தில் அமைந்த அணையாகவும் விளங்கியது. 1931 இல் கட்டத் தொடங்கப்பட்ட அணை 1936 இல் திட்டமிட்டதை விட இரண்டாண்டுகள் கழித்து கட்டி முடிக்கப்பட்டது.

இந்த அணைகயைக் கட்டிய நிறுவனத்தின் பெயரை அதன் பதிவேடுகளில் பார்ப்பவர்கள், ஆறு கம்பெனிகள் கட்டுமான நிறுவனம் என்கிற பெயரைப் பார்த்தால் ஆச்சரியப்படுவார்கள். முதலில் மாரிசன் அண்டு நட்சன் நிறுவனத்தின் தலைவர் ஹாரி மாரிசன் தனது நிறுவனத்தின் சார்பாக ஹூவர் அணை கட்டுவதற்கான ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக முயற்சித்தார்.

அதற்கான கடன் தொகையைப் பெற சான்பிரான் சிஸ்கோ வங்கியின் மேலாளர் கட்லரை அணுகியபோது, கட்டுமான ஒப்பந்தத்தின் பிணைத்தொகை 5 மில்லியன் டொலரை ஒரே நிறுவனம் கட்டுவதென்பது இயலாது. ஆகவே, இன்னும் சில நிறு வனங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு கட்லர் ஆலோசனை தெரிவித்தார். அதன்படி அன்றைக்கு பிரபலமாய் இரு ந்த ஐந்து நிறுவனங்களை இணைத்துக் கொண்டு புதிதாக ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார்.

ஹூவர் அணைக்காகவே பிரத்தியேகமாக தொடங்கப்பட்டது தான் ஆறு கம்பெனிகள் நிறுவனம் (Six companies constructions) அன்றைக்கு அணைக்கட்டுமானப் பணிகளில் நிபுணராக இருந்த பிராங்க்ரோவை கட்டுமானப்பணிகளின் தலைமைப் பொறுப்பில் அமர்த்தினர்.

அவர் ஏற்கனவே இடா, வயோமிங், வாஷிங்டன்னில் கட்டப்பட்ட அணைகளின் கட்டுமானப் பணிகளின் போது பணியாற்றியவர். ஹூவர் அணை கட்டிய பிறகு மேலும் நான்கு அணைகள் கட்டும் பணியிலும் இவரின் பங்கு இருந்தது.

அணையின் கட்டுமானம் ரோமானிய கட்டடக்கலையான கொத்திக் மற்றும் பிரெஞ்சு கட்டடக்கலையான பாலுஸ்டைன் ஆகியவற்றின் கலவையால் உருவாக்கப்பட்டது.

இத்துடன் அமெரிக்க சிற்பக்கலைஞர் கோர்டான் காப்மன்னின் மேற்பார்வையில் ஆர்ட்டெகோ பாணியிலான சிற்பங்களும் வடிக்கப்பட்டன. சுமார் 20 ஆயிரம் பேர் பணியாற்றிய கட்டுமானப் பணியில் சிறியதும் பெரியதுமாக சில விபத்துக்களும் நடந்தன. நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்திருக்கின்றனர். இதில் மிக விசித்திரமான விடயம் என்னவெனில் முதல் விபத்தில் இறந்து போனவர் சர்வேயர் ஜி.ஜே.டிம்மே. அணை கட்டுவதற்கும் முன் அளத்தல் பணியின் போதே கொலொரோடா ஆற்றில் தவறி விழுந்து இறந்து போனார்.

கடைசியாக நடந்த விபத்து கட்டுமானப் பணி முடிவதற்கு 13 நாட்கள் இருந்தபோது நிகழ்ந்தது. இதில் இறந்தவர். முதல் விபத்தில் இறந்துபோன டிம்மேயின் மகன் பேட்ரிக் டிம்மே.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2628

### மோகன்

தன்னைவிட அதிகம் மதிப்பெண் எடுத்த சகமாணவிக்கு விஷம் வைத்த மாணவி–செய்தி



அப்படி பார்த்தா நான்லா ஒட்டு மொத்த கிளாஸ்கே விஷம் வைச்சிருக்கனும்

### ரூபி

"வெற்றி" என்பது "ஒரு புத்தகம்"
"தோல்வி" என்பது "ஒரு பக்கம்"



ஒரு தோல்விக்காக வெற்றியை இழந்து விடாதீர்கள்!....

### விமேஸ்

பையனை இட்லி மாதிரி பொத்தி பொத்தி எடுத்தா அது "அம்மா"



தோசை மாதிரி பொரட்டி பொரட்டி எடுத்தா அது "பொண்டாட்டி"

### யாழினி

பீகாரில் ஒருத்தர் வீட்ல ஏசி மாட்டின பின்னும் கூடா காற்று வருது, கூலிங் கிடைக்கவில்லை என கம்பெனியில் புகார் செய்தான் கம்பெனி மெக்கானிக் போய் பார்த்து மயக்கம் போட்டாரு.



### தரன்

சலூன்ல விராட் கோலி மாதிரி வெட்டி விடு என்று சொல்லி தூங்கி எழுந்து பார்த்தா..



பிராய்லர் கோழி மாதிரி வெட்டி விட்டிருக்கான்

### நிரு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

305

வலம்புரியின் மருத்துவச்சுபர்

## உங்கள் உடல் நிறை எவ்வளவாக இருக்க வேண்டும்?

உடற்பருமனானது எமது உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். இது உடல் ஆரோக்கியத்தை மட்டுமல்லாது உள ஆரோக்கியம் மற்றும் சமூக ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது. இதனால் உடலில் பல்வேறுபட்ட நோய்கள் உண்டாகின்றன.

இதனால் நீரிழிவு நோய், உயர்குருதியமுக்கம், மூட்டு வாதம், நித்திரைக் குழப்பம், பித்தப்பையில் கற்கள் உருவாதல், நுரையீரல் நோய்கள், பாரிசவாதம், புற்றுநோய்கள் போன்றன ஏற்படுகின்றன.

உடற்பருமனை அளவிட சிறந்த அளவுகோல் உடல் திணிவு சுட்டெண் ஆகும்.

**உடல்திணிவுசுட்டெண்ணை எவ்வாறு அளப்பது?**

- உங்கள் நிறையை மீற்றர் அலகில் அளவுங்கள்.
- உங்கள் உடல் நிறையை கிலோகிராம் அலகில் கணியுங்கள்.
- பின்பு சமன்பாட்டில் போட்டு உங்கள் உடல் திணிவு சுட்டியை கணியுங்கள்.

$$\text{உடல் திணிவு சுட்டி} = \frac{\text{நிறை}}{(\text{உயரம்})^2}$$

எனது நிறை 62 kg. உயரம் 163 cm, எனது BMI எவ்வளவு?

$$BMI = \frac{62\ kg}{(1.63m)^2} = 23.39 kg\ m^{-2}$$

**உடல் திணிவு சுட்டியை எந்த வரையறைக்குள் வைத்திருக்க வேண்டும்?**

1. குறைந்த அளவு 18.5 இலும் குறைவு
2. போதுமான அளவு 18.5-23
3. கூடிய எடை 23-27.5
4. மிகக்கூடிய எடை 27.5 க்கு மேல்

நான் இப்போது பருமனான உடலைக் கொண்டுள்ளேன். எனது உயரம் 170 cm. நான் அடைய வேண்டிய உடல் நிறை எவ்வளவு

$$23 = \frac{W}{(1.7m)^2} \qquad W = 23 \times 1.7^2 = 66.47kg$$

**இதை எல்லோருக்கும் பயன்படுத்தலாமா?**




இல்லை, வளரும் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், உடலில் தசைத் திணிவு கூடியவர்கள் (விளையாட்டு வீரர்கள்) உபயோகிக்க முடியாது.

**BMI மட்டும் குறிப்பிட்ட வரையறைக்குள் இருந்தால் போதுமா?**

இல்லை. உங்கள் இடுப்பு சுற்றளவும் குறிப்பிட்ட வரையறைக்குள் பேணப்பட வேண்டும். சிலருக்கு உடல் மெலிவு காரணமாக BMI குறைவாக காணப்படும். ஆனால் அவர்களின் வயிற்றுப் பகுதியில் கூடிய அளவு கொழுப்பு படிவு காணப்படலாம்.

Dr.க.சிவசுகந்தன்

## கற்கும் திறனை மேம்படுத்தும் இசை



இசையானது ஆரோக்கியமான மனித வாழ்விற்கு பல வழிகளிலும் உதவுகின்றது என்பதை பல ஆராய்ச்சிகள் உறுதி செய்துள்ளன.

மன அழுத்தத்தையும் மனப்பதற்றத்தையும் குறைப்பதற்கு இசை உறுதுணையாக இருப்பதுடன் பல நோய்களின் தீவிரத் தன்மையைக் குறைப்பதற்கும் இசை பயன்படுகின்றது என பல ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆய்வுகளின் முடிவின்படி இசைப் பயிற்சி இளையவர்களிடம் கல்வி கற்கும் திறனை மேம்படுத்தும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறு வயது குழந்தைகளின் மொழித்திறன் மற்றும் படிக்கும் ஆற்றலை இசைப்பயிற்சி மேம்படுத்துவதாக இந்த ஆய்வின் முடிவுகள் கூறுகின்றன.

நித்திலம்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களால் இதுவரை 1600 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

**இந்த ஆண்டு வீதி விபத்துக்களில் இதுவரை 1,600 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய வீதி பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.**

கடந்த 5 ஆண்டுகளை விட இந்த ஆண்டு வாகன விபத்துகள் குறைந்துள்ளதாக அதன் தலைவர் அன்டன் டி மென்ஸ் தெரிவித்தார்.

இந்த விபத்துகளில் இருசக்கர வாகன ஓட்டிகள் 100 பேர் உயிரிழந்துள்ளனர்.

சமீபகாலமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால் மக்கள் மிதிவண்டியில் பயணம் செய்வதையே அதிகம் விரும்புகின்றனர்.

எனினும் கவனக்குறைவாக சைக்கிள் ஓட்டுவதால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் மகன் அரசியலில் நுழைந்தால் ஆதரவு வழங்குவேன்

## பாராளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மகன் விமுக்தி குமாரதுங்க தேசிய அரசியலில் நுழைந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து புதிய அரசியல் பயணத்தை ஆரம்பித்தால் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்குவேன் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் மகன் அரசியல் நுழைவார் என்பது குறித்து இதுவரை உத்தியோகபூர்வமாக தனக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அனுபவம்மிக்க அரசியல்வாதிகளின் ஆசீர்வாதத்துடன் இளைஞர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான சூழ்நிலை நாட்டில் காணப்படுகின்றது என அவர் தெரிவித்தார். (நி)

# நாட்டை விட்டு வெளியேறினார் சஜித்தின் சகோதரி

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் சகோதரி நாட்டை விட்டு வெளியேறியதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை எரித்த சம்பவத்தின் போது அவர் அங்கு இருந்ததாக கிடைத்த தகவலின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அண்மையில் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே சஜித் பிரேமதாஸவின் சகோதரி சிறிலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் தனது இரண்டு பிள்ளைகளுடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (நி)


**மணமகள் தேவை**

கொழும்பில் BIO MEDICAL ENGINEER ஆக தொழில் புரியும் MBA BSc (HONS), HND(HONS) படித்த, 1990 இல் பிறந்த 5'8" உயரமான ,யாழ். இந்து, நல்ல குடும்பப் பின்னணியில் உள்ள மணமகனுக்கு தகுதியான, அழகிய 24-28 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. (சி-1782)

077 308 1905/ Whatsapp

**மணமகள் தேவை**

யாழ்.இந்து 1993 29 V Colombo உயர்பதவி , Graduate. செவ்வாயில்லை மணமகள்தேவை. (12575)

**076 852 9425**

**மணமக்கள் தேவை**

• இந்து கௌரவ குடும்பம் 1987 புனர்பூசம் 7 இல் செவ்வாய், சிவில் எஞ்சினியர் மணமகனுக்கும்

• 1989 பூசம் இலங்கை நிர்வாக சேவையிலுள்ள மற்றும், 1991 பூசம் பொறியியல் விரிவுரையாளராக வுள்ள மணமகள்களுக்கும் பொருத்தமான வரன் தேவை.

சுத்த சைவ போசனமுடையவர்கள் மட்டும் தொடர்பு கொள்க. (12581)

**077 154 6757/ 071 803 4182**

**ST.JOHN'S COLLEGE,JAFFNA.**

**VACANCY**

**POST OF VICE PRINCIPAL**

St.John's College,Jaffna was established in 1823 by the church Missionary Society. It is a non-fee levying Assisted Private School within the Diocese of Colombo, Church of Ceylon.It is an all-boys school with distinguished reputation for academic achievement and an extensive range of extra-curricular activities.

We seek an experienced and enthusiastic educationalist with proven administrative and inter- personal skills to take up the post of Vice Principal.

**Essential Criteria:**

- Must be between 40-55 years of age.
- Must hold a Bachelor's Degree from a recognized University preferbly with a Post Graduate qualification(s) in Education or Educational Management.
- Teaching experience in a Secondary school either Government or Private.

**Desirable criteria.**

- Familiarity with National curriculum and Ministry Guidelines.
- Experience with latest learning and performance management systems.
  Good Knowledge of English and Tamil is essential. Knowledge of Sinhala language will be an advantage.
- Ability to assist the school management in all educational matters and extra-curricular activities.

Emoluments will be commensurate with qualifications and experience.

Interested candidates are requested to submit their application along with a complete Curriculum Vitae with names & contact details of two non- related referees and copies of educational & professional certificates to the undersigned by registered post or by email by **26.09.2022.**

(All applications should carry ***'Post of Vice Principal, St.John's College, Jaffna'*** on the top left corner of the envelope or on the subject line of the email.)

**The Chairperson,**
**Governing Body for the Educational Institutions founded by C.M.S in Ceylon,**
**No.368/ 3A , Bauddhaloka Mawatha,**
**colombo 00700,**
**Sri lanka.**

**Email : cmsgb1960@gmail.com**

*only shortlisted candidates will be called for interview*

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1976 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா:82 செவ் 7 சூரி 4 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/ தொழில்:உயர்தரம் தனியார் தொழில் கனடா PR எழுத்துடன் திருமணம் குழம்பியது<br>தொ.இ: B/6133 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:38 செவ் 7 சூரி 9 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:. லண்டன் பல்கலைக்கழக பட்டப்படிப்பு<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டில் பிறந்தவர்கள் மட்டும்<br>தொ.இ:G/7534 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 22 ½ செவ் 3 சூரி 10 இல்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்:A/Lஅரசதொழில் (தபால் திணைக்களம்)<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/6142 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 3<br>கி.பா:08 செவ் 9 சூரி 10 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:உயர் தரம்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு. உள்நாடு<br>தொ.இ:G/7573 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 1<br>கி.பா:44 சூரி.செவ் 4 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:Nursingஅரசதொழில்<br>எதிர்பார்ப்பு: A/L<br>தொ.இ: B/6161 | பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 3<br>கி.பா:2 செவ் 4 சூரி 8 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ:G/7600 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா:38 செவ் 10 சூரி 11 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் பிரான்ஸ் PR<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உரும்பிராய். புன்னாலைக்கட்டுவன்.தீவு வேண்டாம்.<br>தொ.இ: B/6177 | பிறப்பு: 1987இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: செவ் 3 சூரி 2 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:வைத்தியர் விரும்பத்தக்கது அல்லது பொறியியலாளர்<br>தொ.இ:G/7603 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் ____ ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளல் தொடர்பான விழிப்புணர்வு



(குப்பிழான்)


தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் போதைப்பொருள் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளல் தொடர்பான விழிப்புணர்வும் மெச்சுரை வழங்கல் நிகழ்வும் நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் தடுப்புத் தொடர்பான கல்வி, சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றுக்கு முழுமையாகப் பங்களித்து ஆரோக்கியமான சூழலை உருவாக்கத் தொடர்ந்து இரண்டு வருடகாலமாகத் தடுப்புச் செயற்றிட்டத்தில் இணைந்து செயற்பட்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.சி.என். கமலராஜன், மனநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ், மனநல மருத்துவர் ஏ.வினோதா, சிகிச்சையாளர் ப.நிர்மதாஸ், வேல்ட் விசன் முகாமையாளர் எஸ்.நிஷாந்தன், அருட்தந்தையர்களான ந.சுபாஷ், நிர்மல், நிமலன், சாந்திகம் இயக்குநர் திலீபன், மாவட்டச் செயலகத் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் இணைப்பாளர் அ.சியாமினி, அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளார் மற்றும் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட அருட் சகோதரிகள் ஆகியோர் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவிப் பணிப்பாளர் ஏ.ரி.தர்ஷனவால் மெச்சுரை வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (4-18)

# காணிப்பிரச்சினை தொடர்பாக மன்னாரில் விசேட கலந்துரையாடல்

(மன்னார்)



மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை மன்னார் அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் காணி அமைச்சின் செயலாளர் பங்குபற்றுதலுடன் மன்னார் மாவட்ட செயலக ஒன்று கூடுதல் மண்டபத்தில் 10 மணியளவில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் பிரதேச ரீதியாக காணப்படும் காணி தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் மன்னார் மாந்தை மற்றும் நானாட்டான் மடு பகுதியில் மக்கள் பாவனையில் காணப்படும் காணிகள் பிரதேச செயலாளர்களின் ஆலோசனை இல்லாமல் வனவள திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் வர்த்தகமானி அறிவித்தல் ஊடாக கொண்டு வரப்பட்டுள்ளமையால் பல்வேறு நிர்வாக சிக்கல்கள் எழுந்துள்ளமை தொடர்பாக பிரதேச செயலாளர்கள் ஊடாக காணி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அதேநேரம் அரச காணிகளில் வசிக்கும் மக்கள் நீண்ட நாட்களாக காணி ஆவணங்கள் கிடைக்காமல் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வது தொடர்பாகவும் காணி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அதேநேரம் காணி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான பிரச்சினைகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாக காணி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் காணி அமைச்சின் செயலாளர் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் வடமாகாண காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் பணிப்பாளர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஐந்து பிரதேச செயலகங்களையும் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கது. (4-285)



மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 95 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று வலி. மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வலி.மேற்கு பிரதேச சபைக்கு முன்னால் அமிர்தலிங்கத்தின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

(படம்-கஜிந்தன்)

# யாழ்.,மன்னாரைச் சேர்ந்த எண்மர் தமிழகத்தில் தஞ்சம்

(முறிகண்டி)

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள படகு மூலம் அகதிகளாக தனுஷ்கோடி மணல் திட்டில் உணவின்றி குழந்தைகளுடன் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்கள் 8 பேரை பத்திரமாக மீட்ட மரைன் பொலிஸார் அவர்களை அரிச்சல் முனை கடற்கரைக்கு அழைத்துச் சென்று பின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று வரை இலங்கையில் இருந்து 157 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-18-60-100-316)


காணி அல்லது காணியுடனான வீடு வாடகைக்கு தேவை.

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு (பிரதான பாதையை நோக்கியவாறு)

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு பிரதான பாதையை நோக்கியவாறு பேர்ச் 25 அல்லது 30 அளவிலான காணி அல்லது வீட்டுடன் சேர்ந்த காணி ஒன்று ஹாரட்வெயார் ஒன்றிற்கு தேவைப்படுகின்றது. வீட்டுடன் சேர்ந்த காணியாக இருந்தால் வீடு நன்றாக பார்த்துக்கொள்ளப்படும்.

070 431 2356

British Government Era Co.

106 வருட தலைமுறையான நிறுவனம்.

1916 முதல் வஜிர ஹவுஸ்

இல: 23 டில் பிளேஹ் ஏ, எகாழும்பு 3.

(சி-1784)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 350 | 450 | 500 |
| தக்காளி | 250 | 180 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 240 |
| கோவா | 400 | 450 | 450 | 450 |
| கரட் | 320 | 350 | 400 | 400 |
| பூசணி | 120 | 100 | 120 | 120 |
| புடோல் | 140 | 180 | 150 | 200 |
| வாழைக்காய் | 160 | 170 | 160 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 500 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 250 | 250 |
| பயற்றங்காய் | 300 | 190 | 250 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 380 | 300 |
| பீற்றூட் | 140 | 150 | 160 | 200 |
| கறிமிளகாய் | 800 | 600 | 650 | 700 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 350 |
| போஞ்சி | 420 | 320 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 180 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 60 | 40 |
| ஈரப்பலா | 100 | 60 | 80 | 140 |


Luxury 2 , 3 & 4 bedrooms apartment for sale in wellawatte

(ONGOING PROJECT)




2 Bed Room Apartments
830 sq.ft | 950 sq.ft
2 Rooms , 2 Bathroms

3 Bed Room Apartments
1250 sq.ft | 1375 SQ.FT
3 Rooms , 2 Bathroms

4 Bed Room Apartment
1700sq.ft
4 Rooms , 3 Bathrooms , maid room and majd bathroom

09 Boswell place , Colombo : 06

KURINCHI HOME

+94 777 044 501 | +94 766 022 02 | +94 76 290 1211

Office ... Pereira Lane | Colombo 06

(சி-1783)

www.kurinchihome.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் தூய்மையாக இருந்தால் வாழ்வில் எதைக் கண்டும் பயம் ஏற்படாது.

– ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# கடை கெட்ட செயல்களை இனியேனும் கைவிடுங்கள்

தமிழ் இனத்துக்கு எதிராகப் போர் நடத்தி தமிழர்களைக் கொன்று குவித்ததோடு இலங்கையைப் பிச்சைக்கார நாடாக ஆக்கிய கொடியவர்கள் இன்று பட்டலைகிறார்கள்.

தவிர, உலக நாடுகளிடம் பிச்சை எடுத்துச் சீவியம் நடத்துகின்ற கட்டத்திலேயே இலங்கையின் தற்போதைய நிலைமை இருக்கிறது.

இருந்தும் இன்னமும் படைத் தரப்பினர் திருந்துவதாகத் தெரியவில்லை.

ஆம், இந்த நாட்டின் படையினர் சிங்கள மக்களுக்கான படையினராக இருக்கின்றனரே அன்றி, அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கான படையினராக இல்லை.

அவர்களைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் எதிரிகள். அவர்கள் வாழுகின்ற பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

ஆக, பொருளாதார நெருக்கடிக்கு இந்த நாடு ஆட்பட்டு கந்தறுந்து கிடக்கிறது எனில், அதற்குப் பல காரணங்கள் உண்டு என்பது உணரப்பட வேண்டும்.

குறிப்பாக, தமிழ் மக்களைக் கொன்று குவித்த பாவமும் தமிழ் மக்களைக் கண்ணீரும் கம்பலையுமாக அலையவிட்ட துரோகமும் சேர்ந்தே நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

இதிலிருந்து இலங்கை மீள்வதாக இருந்தால், அதற்கான பரிகாரங்கள் நிறையவே செய்ய வேண்டும்.

அதில் ஒன்று முப்படையும் காவல்துறையும் சிங்கள மக்களுக்கானதாக இல்லாமல் இந்த நாட்டுக்கானதாக இருக்க வேண்டும்.

என்றைக்கு படைத் தரப்பு இன, மத, மொழிப் பேதமின்றி இலங்கைத் திருநாட்டுக்குரியதாக ஆக்கப்படுகிறதோ அன்று தான் இந்த நாட்டில் அமைதியும் சுபீட்சமும் ஏற்படும்.

இதை நாம் கூறும்போது; முப்படையினரும் பொலிஸாரும் சிங்களவர்களுக்குரியவர்களா? என்று யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், அதுவே உண்மை என்பதை எங்கும் சத்தியப்படுத்த முடியும்.

ஆம், ஆட்சியாளர்களுக்கு எதிராகச் சிங்கள மக்கள் மிகப்பெரிய போராட்டம் நடத்தினர்.

ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றினர். அமைச்சர்கள், அரசியல்வாதிகளின் வீடுகளை எரித்தனர்.

ஏன்? ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டையும் எரியூட்டினர்.

ஆனால் படையினர் எந்தவகையிலும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை.

இதே ஆர்ப்பாட்டத்தைத் தமிழர்கள் செய்திருந்தால், இலங்கையில் ஒரு தமிழன் மிஞ்சியிருப்பானா? என்பதுதான் நம் கேள்வி.

ஆக, சிங்களவர்கள் என்றால் படையினரின் ஆயுதங்கள் செயலிழந்து போவதும் தமிழர்கள் என்றால் அதே ஆயுதங்கள் குண்டு மழை பொழிவதுமே யதார்த்தம் எனும் போது, இலங்கையின் ஆட்சி திறம் எப்படி என்பதை உணர்ந்து கொள்வது கடினமன்று.

ஆக, நாடு பிச்சை எடுக்கின்ற கட்டத்தில் இருக்கும்போது தமிழர்களின் நிலங்களை அபகரிப்பது. அவர்களுக்குச் சொந்தமான காணிகளில் விகாரைகள் அமைப்பது என்ற கொடும் செயல்களை படைத் தரப்பும் ஆட்சித் தரப்பும் கைவிட வேண்டும்.

இல்லையேல் மிகப்பெரிய பேரவலங்களை இயற்கை இந்த நாட்டுக்கு ஈந்தளிக்கும் என்பது சத்தியமான உண்மை.

# இலங்கையின் இறையாண்மை மீறப்படுவதை சீனா எச்சந்தர்ப்பத்திலும் சகித்துக் கொள்ளாது

## இந்தியாவிற்கு மறைமுக எச்சரிக்கை விடுக்கும் சீனா

(கொழும்பு)

"சில நாடுகள் அருகில் அல்லது தொலைவில் இருக்கலாம். பல்வேறு அடிப்படையற்ற காரணங்களை முன்வைத்து இலங்கையின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்தை மிதித்து, அசௌகரியங்களுக்கு அவை உள்ளாக்கி வருகின்றன" என்று சீனத் தூதுவர் ஷி ஷென் ஹொங் தெரிவித்தார்.

சீனத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையின் ஊடாக அவர் இதனைத் தெரியப்படுத்தியுள்ளார்.

"இலங்கையின் இறையாண்மை, சுயாதீனம் மற்றும் ஒருமைப்பாடு மீறப்படுவதை சீனா எந்தச் சந்தர்ப்பத்திலும் சகித்துக் கொள்ளாது. நாங்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்குவோம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் அடுத்த வாரம் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இதன்போது இலங்கையின் மனித உரிமை சம்பந்தமாக பேசப்படும். இலங்கை மக்கள் ஏற்கனவே கடும் பொருளாதார மற்றும் மனிதாபிமான கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தநிலையில், எப்போதும் மனித உரிமை சம்பந்தமாக உபதேசம் செய்யும் நாடுகள் உண்மையில் என்ன செய்ய போகின்றன என்பது தெரியாதுள்ளது" என்றும் சீனத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# இரு மடங்காக எகிறும் அரிசி விலை

## அரிசி ஆலை உரிமையாளர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் ஒரு கிலோ அரிசியை 290 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டும் என அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில் இளவேனிற் காலத்தில் ஒரு கிலோ நெல் 140 ரூபா தொடக்கம் 150 ரூபா வரையிலான விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதனால் ஒரு கிலோ நெல்லின் விலையை விட இரு மடங்காக அரிசியை விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதோடு மின்சாரக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் அதிகரிப்பதால் அரிசியின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# மீண்டும் கொழும்புக்கு வரும் போராட்டக்காரர்கள்

## புலனாய்வுப் பிரிவினர் தகவல்

(கொழும்பு)

போராட்டக்காரர்கள் நாளை மறுதினம் 30 ஆம் திகதி மீண்டும் கொழும்புக்கு வந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 30 ஆம் திகதியே இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

அன்றைய தினம் கொழும்புக்கு வந்து ஆர்ப்பாட்டங்களை நடத்த போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட அமைப்புகள் ஏற்கனவே தீர்மானித்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிர்ப்பை வெளியிட சில வாரங்களுக்கு முன்னர் கூட போராட்டக்காரர்கள் கொழும்புக்கு வந்தனர். அப்போது பாதுகாப்புத் தரப்பினர் கண்ணீர்ப் புகைக்குண்டு மற்றும் தண்ணீர்த் தாரை தாக்குதல் நடத்தி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை கலைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சுமார் 5 கோடி பெறுமதியான தங்கம் கடத்தியவர் கைது

(கொழும்பு)

ஐந்து கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கடத்தி வந்த இலங்கைப் பிரஜை ஒருவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரிஸ் நகரில் இருந்து நேற்றுக் காலை 5.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த யு.எல் 564 என்ற ஸ்ரீலங்கன் விமானத்தில் இந்த நபர் தங்கத்தைக் கடத்தி வந்துள்ளார். விமான நிலையத்தில் பரிசோதனைகள் எதுவுமின்றி வெளியேறும் கிறீன் செனல் வழியாக வெளியேற முயற்சித்த போதே சந்தேக நபரைச் சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் இருந்து 2.414 கிலோ கிராம் தங்க ஆபரங்களைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (நி)

# தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் வரிசை இரண்டு நாட்களில் முடிவுக்கு வரும்

## அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டதை அடுத்து மீண்டும் ஏற்பட்டுள்ள வரிசை முறைமை 2 நாட்களில் முடிவுக்கு வரும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

விநியோகத்தில் ஏற்பட்ட தொய்வு, இறக்குவதில் தாமதம் மற்றும் பணம் செலுத்துவதில் தாமதம் ஆகியவையே நீண்ட வரிசைக்கு காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படாமையின் காரணமாக மீண்டும் வரிசைகள் உருவாக ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஞ்சன் ராமநாயக்கவினால் தேர்தலில் போட்டியிட முடியாது

## நீதி அமைச்சர் விஜேயதாச

(கொழும்பு)

ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலையான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க 7 வருடங்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்று நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

எந்தவொரு அரசியல்வாதியும் 6 மாதங்களுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டால், அவரது குடியுரிமை 7 வருடங்களுக்கு இரத்துச் செய்யப்படும். இருப்பினும், அரசியலமைப்பின் 34 (2) பிரிவின் கீழ் பொது மன்னிப்பு வழங்கப்பட்டால், ஜனநாயக உரிமை கிடைத்திருக்கும்.

ஆனால் அரசியலமைப்பின் 34 (1) (ஈ) சரத்தின் கீழ் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பு கிடைத்துள்ளது.

இதற்கமைவாக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 7 வருடகாலத்திற்கு தேர்தலில் போட்டியிடவோ அல்லது வாக்களிக்கவோ முடியாது. எனினும், ரஞ்சன் ராமநாயக்கவை தேவைப்படும் சந்தர்ப்பத்தில் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கலாம் என நீதி அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போது முதலாவது நிபந்தனைக்கு அமைவாக இவ்வாறான நிபந்தனையுடன் கூடிய பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு பின்னர் பூரண பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக அமைச்சர் கலாநிதி. விஜேயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2022 - 17.09.2022



**எடுத்த கொள்கை மாறாமல் இலட்சியத்தை நோக்கிப் பயணிக்கும் தனுசு இராசி வாசகர்களே!**




ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். சனியும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பு குறையலாம்.

**சிம்ம - சூரியன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில், இந்த மாதம் முழுவதும் சூரியன் சஞ்சரிக்கிறார். பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியான சூரியன் அங்கேயே சஞ்சரிப்பது யோகம்தான். எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய பாதை புலப்படும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். பணிபுரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். தனித்து தொழில் செய்வது பற்றி சிந்திப்பீர்கள்.

**கன்னி - புதன் சஞ்சாரம்**

ஆவணி 8 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் புதன், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம் பெறுவதால், தொழில் வளம் சிறக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பதவிகளும் பொறுப்புகளும் கிடைக்கலாம். பயணங்கள் பலன் தரும். இக்காலத்தில் எடுக்கும் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**வக்கிர புதன் சஞ்சாரம்**

ஆவணி 12 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் புதன் சூரியனோடு இணைந்து வலுவிழக்கிறார்.

கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற புதன், வக்கிரம் பெறுவது யோகம்தான். சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். கடன்சுமை குறைய புதிய வழி பிறக்கும்.

**சிம்ம - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆவணி 16 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், உங்கள் இராசிநாதன் குருவிற்கு பகைக்கிரகம் ஆவார். சூரியனோடு இணையும் சுக்கிரனால் நற்பலன்கள் கிடைக்கும். புதிய வேலை கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். இல்ல த்தில் மங்கல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பணிபுரியும் இடத்தில் பதவி உயர்வுடன் கூடிய மாறுதல்கள் வரலாம்.

**குரு வக்கிரமும் சனி வக்கிரமும்**

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்கிரத்தில் இருக்கிறார்கள். உங்கள் இராசிக்கும், சுக ஸ்தானத்திற்கும் அதிபதியாக குரு இருப்பதால், ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். பெற்றோர் வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் திருப்பங்கள் தொழிலில் ஏற்படலாம். இக்காலத்தில் குரு, சனி வழிபாட்டைச் செய்யுங்கள். இந்த மாதம் வியாழக்கிழமை தோறும் ஆதி யந்தப் பிரபுவை வழிபடுவதன் மூலம் ஆனந்தமான வாழ்வு அமையும்.

**பெண்களுக்கான பலன்கள்**

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் இராசிநாதன் வக்கிர இயக்கத்தில் இருப்பதால், எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. கொடுக்கல்- வாங்கலில் பிரச்சினை வரலாம். இல்லறம் இனிமையாக கணவன்- மனைவி இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். புணிபுரியும் பெண்களுக்கு சக பணியாளர்களின் ஒத்துழைப்பும் அலுவலக சலுகைகளும் கிடைக்கும்.

## புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**உழைப்பின் மூலமே உன்னத வாழ்வு அமையும் என்று கூறும் மகர இராசி வாசகர்களே!**




ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். சகாய ஸ்தானாதிபதி குருவும் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். எனவே எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

**சிம்ம - சூரியன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்திற்கு அதிபதியான சூரியன், 8 ஆம் இடத்திலேயே மாதம் முழுவதும் சஞ்சரிக்கிறார். எனவே சில இழப்புகளும் விரயங்களும் ஏற்படத்தான் செய்யும். மாற்றங்கள் மனதிற்கு இனியவிதம் அமையுமா என்பது சந்தேகம். உறவினர்பகை உருவாகும். கொடுக்கல்- வாங்கல்கள் பிரச்சினையாகும்.

**கன்னி - புதன் சஞ்சாரம்**

ஆவணி 8 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், 9 ஆம் இடத்தில் உச்சம் பெறுவதால் பாக்கிய ஸ்தானம் பலம்பெறுகிறது. எனவே பெற்றோர் வழியில் ஆதரவு கிடைக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகல புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**வக்கிர புதன் சஞ்சாரம்**

ஆவணி 12 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் 6 இற்கு அதிபதியான புதன் வக்கிரம் பெறுகிறார். 6 இற்கு அதிபதி வக்கிரம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். எதிர்பாராத நற்பலன்கள் உங்களுக்கு வரலாம். அதே நேரம் 9 இற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால், தந்தை வழி உறவில் சில பிரச்சினைகள் உருவாகும்.

**சிம்ம - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆவணி 16 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், அஷ்டமாதிபதி சூரியனோடு இணையும் போது சுபகாரியங்கள் நடைபெறும். தொழிலை விரிவு செய்யும் முயற்சிக்கு ஒத்துழைப்புக் கிடைக்கும். வீடுகட்டும் முயற்சியில் இருந்த தடை அகலும். பாகப்பிரிவினையில் உங்களுக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கும். சுயதொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும்.

**குரு வக்கிரமும் சனி வக்கிரமும்**

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்கிரமாக இருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்திற்கு அதிபதியான குரு வக்கிர இயக்கத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. அவர் சகாய ஸ்தானாதிபதி என்பதால், பல நல்ல வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். சனி வக்ரம் பெறுவதால் சஞ்சலங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லை உண்டு. பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் ஏற்படும். இந்த மாதம் வரும் அஷ்டமி தினங்களில் பைரவரை வழிபாடு செய்து வந்தால் அதிர்ஷ்டம் தேடி வரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உங்கள் இராசிநாதன் சனி வக்கிரம் பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் அனுசரணையாக செல்வதன் மூலம்தான் குடும்பத்தில் அமைதி நிலவும். வீண் விரயங்கள் அகல சுபவிர யங்களை மேற்கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. சக பணியாளர்களால் தொல்லை உண்டு. பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

## உறவினர் பகை உருவாகும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, தமிழ்...

யும் வடக்கு மாகாணத்தையும் இணைத்து குறித்த சுற்றுலாத்துறை இணைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் மூலம் வடக்கில் இருந்து தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களை தரிசிக்கவும் தமிழ்நாட்டிலிருந்து வடக்கின் சுற்றுலா மையங்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களின் சுற்றுலா மையங்களுக்கு இலகுவாக சென்று வருவதற்கும் ஆளுநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

கடந்த வருட இறுதியில் இந்தியாவுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட வட மாகாண ஆளுநர் குறித்த விடயம் தொடர்பில் தமிழ்நாட்டின் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## 3 மாத மாட்டுக்...

ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் குடும்பம் ஒன்றில் கணவன், மனைவியிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து மனைவியின் சகோதரன் இந்த வாக்குவாதத்தில் தலையிட்டுள்ளார்.

இதன் காரணமாக கணவரின் தரப்பினர், பிரச்சினையில் தலையிட்ட மனைவியின் சகோதரனின் வீட்டுக்கு சென்று அங்கு நின்ற 3 மாதங்கள் நிரம்பிய மாட்டுக் கன்றினை அடித்துக் கொலை செய்து விட்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,104)

## பயங்கரவாத...

சுதந்திரக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நபர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வது நல்ல விடயமல்ல என சு.கவின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசியமற்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொள்கை ரீதியாக மாற்றியமைக்க வேண்டும் என்பதில் தாம் உடன்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## சாதாரண...

விபரவியல் ஆய்வுகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2019ஆம் ஆண்டில் சாதாரண குடும்பம் ஒன்றுக்கு மாதாந்த நுகர்வுக்கான செலவு 63 ஆயிரம் ரூபாயாக காணப்பட்டது.

எனினும் தற்போது குறித்த தொகை 47 ஆயிரம் ரூபாயினால் அதிகரித்துள்ளதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்தார். (ம-7)

## பெரும்பாலான...

கட்டாயம் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், பெற்றோலிய சேமிப்பு முனையம் என்பவற்றில் 4200 பேருக்கு பதிலாக, அங்குள்ள 500 பணியாளர்களால் திறமையாக பணியாற்ற முடியும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையில் உள்ள 26,000 பணியாளர்களிற்கு பதிலாக அதிலுள்ள அரைவாசி பணியாளர்களால் திறமையாக பணியாற்ற முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், திறமையற்ற உறுப்பினர்களால் தொழிற்சங்கங்கள் வளர்கின்றன என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள பெரும்பாலான அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது இன்றியமையாதது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்மானங்கள், அரசியல் நியமனங்கள், தவறான நிர்வாகம் மற்றும் திறமையின்மையே அரச நிறுவனங்களின் வீழ்ச்சிக்குக் காரணம் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க நிறுவனங்களில் செயல்திறன் அடிப்படையிலான சம்பள முறை கட்டாயம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், பெற்றோலிய சேமிப்பு முனையம் ஆகியவற்றில் திறமையான பணியாளர்கள் இருந்தாலும், பெரும்பான்மையானவர்கள் திறமையற்றவர்கள் என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்கையின்...

பட்டது.

இலங்கையின் நிதி அமைச்சுக்கும் பரிந்துரைகளே அனுப்பப்பட்டன. எனினும் இலங்கையின் நிதியமைச்சிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

எனவே பந்து இலங்கையிடமே தற்போது உள்ளது என்று சீன தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் மொத்த இருதரப்புக் கடன் 2020ஆம் ஆண்டின் இறுதியில் 6.2 பில்லியன் டொலர்களாக சர்வதேச நாணய நிதியத்தால் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பான் மற்றும் சீனா ஆகியன இலங்கைக்கு அதிக கடன்களை வழங்கியுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கு இந்தியா சுமார் 4 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது அத்துடன் இந்த ஆண்டு கடன் மற்றும் பரிமாற்றங்கள் மூலம் இலங்கையில் 14 பில்லியன் டொலர் சர்வதேச இறையாண்மை பத்திரக் கடனுக்கும் உள்ளாகியுள்ளது. (ம-7)

## சீனத்...

வந்தடைந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹோங், சியாம் பிரிவின் அஸ்கிரி பீடத்தின் பெருந்தலைவர் அதி வணக்கத்துக்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரதன மஹாநாஹிமியை தரிசித்து ஆசி பெற்றார்.

பின்னர், மல்வத்து மகா விகாரைக்கு வந்த சீனத் தூதுவரை, சியாம் மஹா கோஷ்டியின் மல்வத்து பக்கத்தின் பெருந்தலைவர் ஸ்ரீ சுமங்கல மஹாநாஹிமா பார்வையிட்டார்.

இதேவேளை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபக் பாக்லேயும் நேற்று கண்டிக்கு விஜயம் செய்யவிருந்த நிலையில், பின்னர் அது இரத்துச் செய்யப்பட்டது.

கண்டியில் உள்ள இந்திய துணை உயர்ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் ஒருவர், அவசர நிலை காரணமாக இந்த விஜயம் இரத்துச் செய்யப்பட்டதாக தெரிவித்தார். (ம-7)

## ஆர்ப்பாட்டக்...

சர்வதேசத்தின் உதவிகள் கிடைக்கப் பெறுவது சந்தேகத்திற்குரியது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டு மக்களுக்காக போராடிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக அடக்குமுறைகளைப் பிரயோகித்துக் கொண்டு எவ்வாறு சர்வதேசத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்? சர்வதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இலங்கையில் ஊடகச் சுதந்திரத்தையும், அடிப்படை மனித உரிமை மீறல்களையும் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளனர் என்று தெரிவித்தார்.

இவ்வாறான சூழலில் எமக்கு சர்வதேசத்தின் உதவிகள் கிடைக்கப் பெறுமா, இல்லையா என்பது சந்தேகத்திற்குரியதே. தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நகைப்பிற்குரிய வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. சிறு பிள்ளைகள் கூட செயற்படாத வகையிலேயே அரசாங்கத்தின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என்றார். (ம-7)


தன நிதானய
திகதி - 2022.08.27
சீட்டிழுப்பு இலக்கம் - 890
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 06 22 31 35

மஹஜன சம்பத
திகதி 2022/08/27
சீட்டிழுப்பு இலக்கம் 4860
ஆங்கில எழுத்து: U
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 6 1 2 0 6
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.27
சீட்டிழுப்பு இலக்கம் 169
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 13 24 40 55
துலாம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1208
வெற்றி எழுத்து: P
சுப்பர் இலக்க: 03
வெற்றி இலக்கங்கள்: 11 17 63 73

கொவிசெத
திகதி 2022.08.27
சீட்டிழுப்பு இலக்கம் 3102
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 06 40 48 53
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1835
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.08.27
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: Q 14 24 45 74
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,353,340/-

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.27
சீட்டிழுப்பு இல : 3996
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,411,180/-
வெற்றி இலக்கங்கள்: 14 36 45 51
ஆங்கில எழுத்து: V
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,322,425.20
திகதி 2022-08-27
வெற்றி வாரம் 3547
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள்: 02 04 21 46
கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,732,240/-

25 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: K 13 40 47 57 66
சீட்டிழுப்பு வாரம் 1011
வர்ணம் சிவப்பு
திகதி 2022.08.27
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 256,526,695/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 522
திகதி 2022-08-27
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 18 19 25
விதி எண்: 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,179,728/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல :1661
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2022.08.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,360,540/-
வெற்றி இலக்கங்கள்: 16 55 59 68
ஆங்கில எழுத்து: C
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜ மருத்துவம்

கரப்பன், கிரந்தி, சோரியாசிஸ், மதுமேகம், வெள்ளைபடுதல், கெர்ப்பவாயு, தீட்டு ஒழுங்கீனம், உடல்மெலிவு, பருமன், செங்கமாரி, பக்கவாதம், ஆண்மைக்குறைவு, சிறிய மார்பகம், மன அழுத்தம். *சிகிச்சை பெறுவதற்கு* T.P : 076 274 4488

பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
(சிறப்பு ஆலோசகர்)

(12576)

## காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (12547)

**074 321 1097**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டுப்பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு (12586)

**077 512 2931**

## பௌதிகவியல் (Physics)

உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் (Personal), குழுவாகவும் (Group Classes) கற்பிக்கப்படும்.

(12568)

**076 157 0107**

## கடை விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் நல்லூர் MPCS களஞ்சியத்திற்கு முன்பாக கடை விற்பனைக்கு உண்டு.

(C-4803)

**021 222 8875**

## மதுரம் கல்வி நிறுவனம்

எழுதுநர், தரம் 1,2 கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவை. கோப்பாய் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

(12589)

**077 912 2918**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603,**
**076 097 3127**

## ஓலைச்சுவடி சோதிடம்

ஓலைச்சுவடி மூலமாக காண்டம் வாசிக்கப்படும்.
இந்தியாவில் இருந்து [ வைத்தீஸ்வரன் கோவில் ]

**அதிசூட்சும காண்டம்**

அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும். திருகோணமலை, மட்டக்களப்பில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும்.

**Call - 076 328 7119**
**WhatsApp - 077 630 6290**

(12594)

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பிறிண்டிங் வேலை (Printing work), புத்தகம் கட்டுதல் (book binding), Photoshop டிசைனிங் முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

(12574)

**077 392 0797**

## காணி விற்பனைக்கு

58/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்)

(C-4766)

தொலைபேசி:
**077 977 3732**

## வேலைவாய்ப்பு

எமது EDM நிறுவனத்தில் விநியோகஸ்தர்கள், உதவியாளர்கள், மேற்பார்வையாளர், அலுவலக உதவியாளர் போன்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாள் சம்பளம் - 1,000 - 1,800
மாத சம்பளம் - 45,000

(12580)

**076 205 7355, 077 695 3242**

## யாழ். வேலைவாய்ப்பு முகாம்

6 இற்கு மேற்பட்ட நிறுவனங்களின் Cashier, Receptionist, Office Admin, விற்பனையாளர், Online, Part time Jobs உட்பட 30 இற்கு மேற்பட்ட வேலைவாய்ப்புகளிற்கு 29.08.2022 1.30 இல் இருந்து 3.30 மணிவரை நேர்முகத்தேர்வுகள் இடம்பெறும்.

**Dewmas**
**No.51, Amman Road, Nallur.**

(12585)

**077 773 3368, 074 138 3368**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி கேணியடி வைரவர் கோவில் அருகில் 2 பரப்பு நீள்சதுரக் காணி மூன்று பக்க சுற்று மதில் மற்றும் குழாய்க்கிணறு ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

(12590)

**076 231 3139**
**071 822 9630**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் பிரசித்தி பெற்ற மண்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயில் அருகாமையில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- சாட்டி கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- யாழ்.நகரில் இருந்து 8Km தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும்3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல் வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சிய சாலைகள் அமைப்பதற்கும் திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்

(12549, 12578)

பார்வையிடும் நேரம் காலை **6.00** மணி தொடக்கம் மாலை **6.00** மணி வரை

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:- **ஜெயம்**

**077 814 7389, 077 241 7589**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.